# தமிழரசு




1.9.1996 ரூ.3





# இந்த இதழில்...


| | |
|---|---|
| நிர்வாகத்தில் தூய்மை, ஆட்சியில் எளிமை | 2 |
| 100 நாட்களில் ஆட்சியின் அரும்பணிகள் | 6 |
| சட்டப்பேரவையில் | 9 |
| அம்மா அப்பா | 10 |
| திரைப்பட விருது வழங்கும் விழா | 12 |
| படித்தவர் பண்பு | 16 |
| வெளிச்ச விளக்குகள் | 20 |
| செய்திச் சரம் | 22 |
| அம்மா எங்கே? | 26 |
| நூல் நயம் | 31 |
| இன்று புதிதாய்ப் பிறந்தோம் | 32 |
| வாதநோயும் சித்த மருத்துவமும் | 34 |
| தோட்டக்கலை வளர்க்கும் தர்மபுரி | 37 |
| வேலைவாய்ப்புகள் | 39 |
| வாசகர் இதயம் | 47 |
| ஆசிரியர் மடல்.. | 48 |



## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
ஆவணித் திங்கள்: 17
மலர் :27 இதழ் : 5
1.9.1996
விலை ரூ. 3.

# நிர்வாகத்தில் தூய்மை

# ஆட்சியில் எளிமை :

# விடுதலை நாள் விழாவில்

# முதல்வர் கலைஞர் உறுதி

பொன்னாளாம் இந்நாள் - இந்தியச் சுதந்திரத்திற்குப் பொன் விழா ஆண்டு தொடங்கும் நாள் என்பதை எண்ணும் பொழுதும் - சுதந்திர தின வெள்ளி விழா ஆண்டினையும் தமிழகச் சட்ட மன்றப் பேரவையில் நானே முதலமைச்சராக இருந்து கொண்டாடினேன் என்பதை எண்ணும் பொழுதும் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மகிழ்ச்சியைத் தமிழக மக்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற இந்தத்திருநாளில், என் அன்பு வாழ்த்துக் களைத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டு - வீரசுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்துபட்ட மான மறவர்களுக்கும் தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

அண்ணல் காந்தி அடிகளும் ஆசிய ஜோதி நேருவும், திலகரும், தீனபந்துவும், திறன் மிகு சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், பெருந்தலைவர் காமராஜரும், வித்தகர் ராஜாஜியும், வீரர் நேத்தாஜியும், எண்ணற்ற இந்திய நாட்டின் பெருவீரர்களும் சிந்திய ரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம். அந்த மலரின் மணம், மாளிகைகளின் பலகணி வழியாக, தென்றலின் தோள்மீது ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும் என்பதே நமது இடையறாத ஆசை!

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் 1947 ஆகஸ்டு 15, அந்நிய ஆதிக்கத்துக்குக் கணக்குத் தீர்த்த நாள் என்றும், ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற ஆகஸ்டு 15, சுதந்திரத்தின் பயன்களைக் கணக்குப் பார்க்கிற நாள் என்றும் அழகுபடக் கூறினார்.

வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்ல! மக்களுக்குச் சக வாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கியக் குறிக்கோள் அன்றோ?



ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா? இல்லை என்று தானே பதில் எழுந்து தொல்லை தருகிறது மனத்துக்கு!

தமிழகத்தைப் பொறுத்த வரையில் நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு இயன்ற வரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்றுவருகிறோம்.

இன்றைய இந்தியா கூட்டாட்சி முறை என்னும் புதிய யுகத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. மத்தியில் ஆட்சிப் பொறுப்

பேற்றுள்ள ஐக்கிய முன்னணி அரசு, கூட்டாட்சித் தத்துவமெனும் உதயத்தை உணர்த்தும் வைகறை விடியலாகும். இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்க நாட்டின் பல்வேறு மாநிலங்கள், சமுதாயங்கள், மொழிகள், மதங்கள் ஆகியவற்றின் விருப்பங்களை முழுமையாக அங்கீகரிக்க, ஓர் அரசு மத்தியில் நமக்குத் தேவை என்பதை இந்த அனுபவம் நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கோட்பாட்டை மனதில் கொண்டுதான், ஐக்கிய முன்னணி அரசின் பொதுவான குறைந்த பட்சத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இங்கே தமிழகத்தில் நேர்மையான, இலஞ்ச லாவண்யமற்ற நிருவாகத்தை அளிப்பது என்ற உறுதியோடு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று திங்களில், இந்நோக்கத்தை எய்துவதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஊழல் புரிவோருக்கு எதிராக அவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும், அல்லது அதிகாரிகளாக இருந்தாலும் சரி - உறுதியான, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பல்வேறு நிருவாக நடைமுறைகளை எளிமைப்படுத்தும் பணியையும் நாம் தொடங்கி யுள்ளோம். இதுவரை உயர்மட்டத்தில் குவிந்து கிடந்த அதிகாரங்களைப் பரவலாக்குதல் - நிருவாகத்தில் பல்வேறு நிலைகளை மக்கள் அணுகும் வகையில் எளிதாக்குதல், ஆகிய நடைமுறைகளையும் இவ்வரசு தொடங்கியுள்ளது. இந் நடவடிக்கைகள், நேர்மையான, பொறுப்பான நிருவாகத்திற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவை உண்மையில் ஒரு கூட்டாட்சி அரசாக மலரச் செய்வதற்கு, அதிக அதிகாரங்களுடன் கூடிய மாநில சுயாட்சியின் அவசியம் குறித்து வலியுறுத்துகின்ற அதே தருணத்தில், அதே முறையில், அர்த்தமுள்ள குடியாட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதிலும் இந்த அரசு பொறுப்

> “
> இந்தியச் சுதந்திரத்திற்குப் பொன் விழா ஆண்டு தொடங்கும் நாள் என்பதை எண்ணும் பொழுதும் – சுதந்திர தின வெள்ளி விழா ஆண்டினையும் தமிழகச் சட்ட மன்றப் பேரவையில் நானே முதலமைச்சராக இருந்து கொண்டாடினேன் என்பதை எண்ணும் பொழுதும் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள் கிறேன்.
> ”

பேற்றுக் கொள்கிறது. எனவே, இம்மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திற்கும், தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது. இதன் வாயிலாகக் குடியாட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதன் பயன்களை இம்மாநில மக்கள் நன்கு உணர இயலும்.

வன்முறைக் கும்பலின் வன்செயலால், தமிழக மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு, காவல் துறையினரின் மீது மக்களின் நம்பிக்கை குலைந்து விட்டிருந்த நிலையில், இவ்வரசு பதவி ஏற்றது.

மாமூல் கேட்டுத் துன்புறுத்தும் கும்பலும், கொலை கொள்ளைகளில் தேர்ந்த குண்டர்கள் கூட்டமும், ஏனைய சமூக விரோத சக்திகளும், மக்களை

---

இந்தியாவின் ஐம்பதாவது சுதந்திரதினமான 15.8.'96 அன்று சென்னை கோட்டையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து உரையாற்றினார்.

காலை 8.20 மணிக்கு விழாவிற்கு வருகை புரிந்த முதல்வர் கலைஞர் அவர்களைத் தலைமைச் செயலாளர் திரு. கே.ஏ. நம்பியார் வரவேற்றார். பின்னர் முதல்வர் அவர்கள் காவல்துறையினர் அணிவகுப்பைப் பார்வையிட்டு அவர்கள் அளித்த மரியாதையை ஏற்றார். பின்பு சரியாக காலை 8.30 மணிக்குக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து காவல் துறையில் இசைக் குழுவினால் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது. பின்னர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் காலை 8.35 மணிக்கு கோட்டை கொத்தளத்தில் இருந்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

அச்சுறுத்திவந்தன. அக்கொடியோர் அச்சுறுத்தலை அகற்ற, இந்த அரசு எடுத்துள்ள உறுதியான நடவடிக்கையை அனைவரும் அறிவீர். இத்தகைய கடும் நடவடிக்கைகள் தொடரும். அரசியலைக் குற்றவாளிகளின் கூடாரமாக்குவதற்கும், குற்றவாளிகளே அரசியல் வாதிகளாக உருமாறுவதற்கும் நிச்சயம் முடிவு கட்டப்படும்.

இந்த அரசு களைகளை அகற்றுவதோடு நிற்காமல், தமிழ் மண்ணில் இரண்டாவது பசுமைப்புரட்சியை ஏற்படுத்தப் புதிய முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்று நூறு நாட்கள் முடிவதற்குள் – அதற்குள்ளாகவே, ஏழையெளியோர், நடுத்தர மக்கள் அனைவரும் ஏற்றிப் போற்றிடும் அளவுக்கு அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளையே மையமாக வைத்து இந்த அரசு அறிவித்துள்ள திட்டங்களையும், செயல்முறைகளையும் நடுநிலையாளர் பாராட்டிப் போற்றுகின்றார்கள்.

இடைக்காலத்தில் பின்தங்கிவிட்ட தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டி தொழில் துறையில் தமிழகம் தொடர்ந்து முன்னேறு வதற்கான முயற்சிகளை இந்த மூன்று திங்களுக்குள்ளாகவே நிறைய



செய்திருக்கிறோம் என்ற மன நிறைவோடு உங்கள் முன்னால் நிற்கிறேன்.

சிறந்த அடிப்படை வசதிகளையும், தேர்ச்சி பெற்ற மனித ஆற்றலையும் பெற்றுள்ள தமிழ்நாட்டில் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கம்.

மக்களின் அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருள் பங்கீட்டு முறை சீரமைக்கப்படுவதற்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் - அரசு அலுவலர்கள் - நுகர்வோர் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டை ஒன்றுக்கு இருபது கிலோ அரிசி தங்கு தடையின்றி உரியவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஆயிரம் கோடி ரூபாய் மானியத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அரசின் முதல் நடவடிக்கையே - ஒரு கோடியே 25 இலட்சம் மக்கள் பயன்பெறக் கூடிய வகையில் தரை வரியை ரத்து செய்ததாகும். பட்டா நிலங்களுக்கான வரி விகிதம் பழைய நிலைக்கு மாற்றப்பட்டது - எங்கள் மனப் பான்மைக்கு எடுத்துக் காட்டா கும்.

அண்மையில் வெளியிடப் பட்ட நிதிநிலை அறிக்கையின் மூலம் விற்பனை வரியில் பெரிய அளவில் செய்யப் பட்டுள்ள மாற்றம் ஏழையெளி யோர் பயன்படுத்தும் உணவுப் பொருள்களுக்கு அறவே வரி விலக்கு அளித்த செயல் - இவை எல்லாம் இது ஏழை, நடுத்தர மக்களுக்கான அரசு என்பதை எடுத்துக்காட்டும் கண்ணாடி யாகும்.

அடிப்படை வசதிகளைப் பெறுவது மக்களின் உரிமை! அந்த வசதிகள் நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படாமல் இருப்பது ஒரு நல்ல அரசுக்கு அடையாளம் அல்ல. இதனை உணர்ந்த இந்த அரசு, பொறுப் பேற்றவுடன் மக்களின் அடிப் படை வசதிகளில் இருக்கின்ற குறைகளைக் களைந்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான குடிநீர், சாலைகள், மின் விளக்குகள் போன்ற வசதி களைச் செய்து கொடுக்க போர்க்கால அடிப்படையில் பணியாற்றி வருகின்றது.

இலட்சக்கணக்கான மகளிருக்கு வேலைவாய்ப்பு - 12ஆம் வகுப்பு படிக்கின்ற (ப்ளஸ் 2) மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணம் - மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உயர் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசு களும் வழங்கும் திட்டத்தோடு அவர்கள் படிப்புச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்ற அறிவிப்பு - பட்டதாரியே இல் லாத குடும்பங்களைச் சேர்ந்த உயர் மதிப்பெண் பெற்ற

மாணவர்கள் தொழிற் கல்வியைத்தொடர்ந்து படித்துமுடிக்க நிதி உதவி அளிக்கும் சிறப்புத் திட்டம் - இவை போன்ற எண்ணற்ற திட்டங்கள் இந்த மூன்று மாதக் காலத்திற்குள் அறிவிக்கப்பட்டு - முறைப்படி செயல்படுவதை - எங்களை ஆட்சியிலே அமர வைத்த ஆன்றோர், சான்றோர் முதல் - அன்றாடம் உழைத்து வாழும் பாட்டாளி மக்கள் வரை அனைவரும் அறிவர்.

அரிய பெரிய திட்டங்களைத் தீட்டவும் - தீட்டிய திட்டங்களின் பயனை மக்கள் பெற்றிடவுமான அருஞ்சாதனையை இவர்கள் இயற்றிட வல்லவர்களோ என ஐயுறுபவர் எவராவது இருப்பின், அவர்களுக்கு நான் வழங்கும் உறுதியாவது;

எங்கோ சென்று கொண்டிருந்த மக்களின் வரிப்பணம் மக்களுக்கே பயன்படும் வருமானமாக அரசின் கருவூலத்திற்கே வரத் தொடங்கியுள்ளது. இந்த வருமானத்தை மேலும் பெருக்கி, நேர்மையான முறையில் நிர்வாகத்தை நடத்தி, விரிவாகவும் விரைவாகவும் ஏழை எளியோர், தொழிலாளர், நெசவாளர், விவசாயிகள், கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்து மக்கள், சாதாரண சாமான்ய நடுத்தர வர்க்கத்தினர் துளி அளவு துன்பத்திற்கும் ஆளாகாமல் இந்த ஆட்சியின் பணி தொடரும் என்பதேயாகும்.

பிரச்சினைகள் பல நம்மைச் சூழ இருக்கின்றன. அவற்றைத் தன்னம்பிக்கையுடனும் தளராத ஊக்கத்துடனும் எதிர்கொண்டு வெற்றி பெறுவோம் எனச்



சூளுரைத்து இந்தச் சுதந்திர நன்னாளில் என் வாழ்த்துக்களை தெரிவித்து; அனைவரும் ஒருமுகமாக நின்று பெற்ற சுதந்திரம் பேணிக் காக்கவும் - ஜனநாயக மாண்பு உயர்ந்து நிற்கவும் - சபத மேற்க அணிவகுத்து வாரீர் என அன்புடன் அழைக்கிறேன்–

வணக்கம்.

### *நீச்சலும் ஆட்சியும்!*

**நீ**ந்தக் கற்றுக்கொள்ளத் தண்ணீரில் இறங்கித்தான் ஆகவேண்டும்; இதனால் சிரமங்கள் எற்படத்தான் செய்யும். மூச்சுத் திணறும், மூக்கிலும் வாயிலும் தண்ணீர் புகுந்துவிடும். சுழலில் சிக்கிக்கொள்ளாமலும் இருக்க வேண்டும் என்ற பாதுகாப்போடுதான் இடுப்பிலே கயிற்றைக் கட்டிக்கொண்டு, கரையிலே ஒரு ஆளையும் நிறுத்திவைத்துவிட்டுத் தண்ணீரில் இறங்கியிருக்கிறோம். இத்தனை சங்கடங்களையும் ஏற்றால்தான் நீந்தக் கற்றுக்கொள்ள முடியும்.

மூழ்கிப்போகும் அளவுக்கு விவரம் தெரியாதவர்கள், இன்றையதினம் ஆட்சிக்கு வந்துவிடவில்லை!

– 1969ல் அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.

சொன்னதைச் செய்வோம்!
செய்வதையே சொல்லுவோம்!

# 100 நாட்களில் ஆட்சியின் அரும்பணிகள்



மனை வரி ரத்து, நிலுவைத் தொகையும் தள்ளுபடி.

✦

மருத்துவமனை பார்வையாளர் கட்டணம் நீக்கம்.

✦

மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைப்பு.

✦

மனுநீதித் திட்டம் மீண்டும் செயலாக்கம்.

✦

பட்டா பாஸ் புத்தகம் வழங்க ரூ. 24 கோடி நிதியொதுக்கீடு.

✦

புதிய மாவட்டங்கள் நான்கு உருவாக்கம்.

✦

'சிங்கிள்' டெண்டர் முறை அறவே நீக்கம்.

✦

நியாயவிலைக் கடைபொருட்கள் குறித்த நேரத்தில் வழங்கல்.

✦

திருப்பெரும்புதூரில் கொரியா கார் தொழிற்சாலை (ரூ. 2450 கோடி).

✦

சென்னை மாநகராட்சிக்கு ரூ.200 கோடி, மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.

✦

பொள்ளாச்சியில் தேங்காய் பதனிடும் தொழிற்சாலை (ரூ.339 கோடி).

✦

கன்னியாகுமரியில் தேங்காய் உட்பொருள் தொழிற்சாலை (ரூ.18 கோடி).

✦

செங்கல்பட்டு அருகே கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலை (ரூ.550 கோடி).

✦

பொள்ளாச்சி அருகே ஏற்றுமதி இறைச்சிக் கூடம் (ரூ.168 கோடி).

✦

தமிழ்நாடு எரிவாயுத் திட்டம் (ரூ.30 கோடி).

✦

மறைமலைநகரில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் திட்டம் (ரூ.41.57 கோடி).

✦

பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்றுமாணவர்கட்கு மாவட்டந்தோறும் மேற்படிப்பை அரசு ஏற்றல் (10வது, +2).

✦

முதல் 10 இடம் பெறும் பட்டதாரிகளற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விச்செலவை ஏற்றல்.

✦

+2 மாணவர்கள் வரையில் இலவச பஸ் பயணம்.

✦

இலங்கைத் தமிழ் மாணவர்கட்கு
உயர்கல்வி கற்பதில் தடை நீக்கம்.

◆

21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 80 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்வு.

◆

85 புதிய தொடக்கப் பள்ளிகள் அமைப்பு.

◆

திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி (ரூ.50 இலட்சம்).

◆

மூவலூர் இராமாமிர்தம் திட்டம் திருமண உதவித் தொகை அதிகரிப்பு (ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/-).

◆

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு திட்ட உதவித் தொகை உயர்வு (ரூ. 300/- லிருந்து ரூ. 500/-).

◆

குடும்பத் தலைவர் இறந்தால் குடும்பத்திற்கான நிதியுதவி உயர்வு (ரூ.5,000/- லிருந்து ரூ.7,500/-).

◆

விபத்தில் உயரிழந்தோர் குடும்பத்திற்கு நிதியுதவி அதிகரிப்பு (ரூ.10,000/- லிருந்து ரூ.15,000/-).

◆

இனக்கலவரங்களில் இறப்பவர் குடும்பத்திற்கு ரூ.50,000/-.

◆







திரைப்படத் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்குத் தீர்வு.

◆

திரைப்படச் சண்டைக் காட்சியில் உயிரிழப்போர், காயமடைவோருக்கு உதவி, குறைந்த முதலீடு திரைப்பட மானியம் உயர்வு (ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம்).

◆

அரசு இடங்களில் படப்பிடிப்புக் கட்டணம் குறைப்பு.

◆

அரசு விழாக்களில் எளிமை;
அரசு நிகழ்ச்சிகளில் சிக்கனம்.

◆

பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்வு (ரூ.500/- லிருந்து ரூ.1000/-).

◆

8500 முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம்.

◆

அர்ச்சகர்கள், கிராமப் பூசாரிகள், உலமாக்கள், ஓதுவார்கள் உதவித் தொகை உயர்வு (ரூ.400-லிருந்து ரூ.500).

◆

இரண்டாம் பசுமைப் புரட்சி உருவாக்க வல்லுநர் குழு.

◆

பருப்பு, மஞ்சள், மிளகாய், புளி, பனங்கற்கண்டு முழு வரிச்சலுகை.

◆

கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி, காகிதம், பொறிகடலை, சாதாரண பிஸ்கட்டுகள், ஆயத்த ஆடைகள் வரிகுறைப்பு.

✦

குத்தகைக் காலத்தை இருபது ஆண்டுகளாக நீடிக்கும் புதிய கனிமக் கொள்கை.

✦

அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்திப் பிரிவுகள்.

✦




சிறு துறைமுகங்களைச் சீராக்க 'கடல்சார் வாரியம்'.

✦

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்தவர்களுக்கு ஆசிரியர் பணிக்கு முன்னுரிமை.

✦

தமிழ் ஆட்சி மொழித் துறைக்குத் தனி அமைச்சகம்.

✦

மெட்ராஸ் என்பதை 'சென்னை' என்று பெயர் மாற்றம்.

✦

தேவநேயப் பாவாணரின் அரிய நூல்கள் அரசுடைமையாக்கல்.

✦

மொழிக்காவலர், தமிழறிஞர், நலிந்த கலைஞர் உதவித் தொகை உயர்வு (ரூ.400/- லிருந்து ரூ.500/-).

✦

அயல்நாட்டு மது உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கும் வரியை உயர்த்தி அரசுக்குக் கூடுதல் வருவாய் (ரூ.65 கோடி).

✦

மொலாசஸ் ஏற்றுமதியில் நடந்த முறைகேடுகள் நீக்கம் (ரூ.10 கோடி).

✦

கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந்துகள் செல்லமுடியாத முறைகேடான சலுகைகள் நீக்கம்.

✦

தொட்டிய நாயக்கர் மற்றும் உட்பிரிவுகளுக்குத் துணை வட்டாட்சியர்களே சாதிச் சான்றிதழ் வழங்க ஆணை.

✦

1.10 இலட்சம் கைத்தறி நெசவாளர் பயன்பெற சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சலுகை பெறும் வயது வரம்பு 60வது ஆக உயர்வு.

✦

அரசு அலுவலர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதியை ரூ.60,000/- லிருந்து ஒரு லட்சமாக அதிகரிப்பு.

✦

10,000 ஆசிரியர்களுக்கு புதிதாகப் பணிவாய்ப்பு.

✦

முழு ஓய்வூதியம் பெறத் தேவையான பணிக்காலம் 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆகக் குறைப்பு.

✦

69% இட ஒதுக்கீட்டை நிலைநாட்ட உச்சநீதி மன்றத்தில் அயராத முயற்சி.

✦

பலமுனை விற்பனை வரி முறையினை மாற்றி ஒருமுனை விற்பனை வரியாகச் சீரமைத்தல்.

✦

கடந்த ஆட்சியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10,000 காவலர்கள், 600 காவல்துறை உதவி ஆய்வாளர்கள் 1000 தீயணைப்புப் பணியாளர்கள் பணியமர்த்தல்.

✦

# சட்டப்பேரவையில் நகைச்சுவை

## மற்றவை வெண்திரையில்

''முன்பிருந்த அரசில் எல்லாத் துறையிலும் ஊழல் நடந்திருக்கிறது; அதுபற்றி சட்டப் பேரவையில் வெள்ளைஅறிக்கைதாக்கல் செய்யப்படுமா?'' என்று திரு. ஞானசேகரன் (த.மா.கா), சுப்பராயன் (இந்தியக் கம்யூ.) ஆகியோர் கேட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் குறுக்கிட்டு - ''ஒரே விஷயத்தை இருவரும் கேட்கிறீர்கள்; அவையில், சட்ட ரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைகள்பற்றிச் சொல்ல முடியாது. பழைய காலத்தில் சினிமாதியேட்டரில்படம் பார்க்கச்செல்லும்போது கதைப்புத்தகம் தருவார்கள். அதில், முக்கால் பாகம் கதையை வெளியிட்டுவிட்டு 'மற்றவை வெண்திரையில் காணுங்கள்! என்று போட்டிருப்பார்கள். அதுதான் இதற்குப் பதில்!''என்றாரே பார்க்கலாம்.

அவையில் எழுந்த சிரிப்பலை ஓயச் சிறிது நேரம் ஆயிற்று.

## பாயசத்திற்குப் பிறகு கஞ்சியா?

தேனியில் உள்ள காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தைப் பெரிய குளத்திற்கு மாற்றுவது பற்றி சட்டப் பேரவையில் கேள்வியெழுப்பினார். திரு.எல். மூக்கையா.

''அதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது'' என்று மாண்புமிகு முதல்வர் கூறினார். மறுபடியும் எழுந்த திரு. மூக்கையா ''பெரியகுளத்தில் குறிப்பிட்ட பகுதியில் காவல்நிலையம் ஏற்படுத்த முடியுமா?'' என்று கேட்டார்.

உடனே முதல்வர் ''பாயசமே தரப்படும் என்று சொல்லிவிட்ட பிறகு அவர் கஞ்சியைக் கேட்கிறார்!'' என்றாரோ இல்லையோ, அவையினரெல்லாம் குபீரென்று சிரித்து விட்டனர்.

## சங்க காலத்தில் ஜீப்?

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் சட்டப் பேரவையில் தமது துறைக்கான மானியக்கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசினார்.

''வருவாய்த்துறை அலுவலர்களுக்குப் புதிய ஜீப்புகள் வழங்கப்படுவதைக் கொள்கை விளக்கக் குறிப்பில் தூய தமிழில் 'புதிய ஈர்ப்புகள்' வழங்கப்படும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்குக் காரணம் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடி மகன்தான். சாதாரணமாக நாம் ஜீப்புகள் என்றுதான் சொல்வது வழக்கம். ஆனால், சங்க காலத்தில் அப்படிச் சொல்லப்பட்டதாக அவர் கூறுகிறார். சங்ககாலத்தில் ஜீப்புகள் இருந்தனவா? எனக்குத் தெரியவில்லை!'' என்றார் அமைச்சர். அவையில் சிரிப்பொலி எழுந்தது.

## தலைமுடியில் நரை

சமூக நலத்துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில் டாக்டர்காஞ்சனாகமலநாதன் (தி.மு.க.) நல்ல அரசின் ஆட்சியில் தலைமுடி நரைக்காது. கறுப்பாகத்தான் இருக்கும் என்ற பொருளில் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் பார்க்கும் போது பாடிய பாடல் வரிகளைக் குறிப்பிட்டார்.

பின்னர் வேலூர் ஞானசேகரன் (த.மா.கா) பேசும்போது ''நல்ல அரசின் ஆட்சியில் தலைமுடி நரைக்காது என்கிறார்; கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் தலைமுடி நரைத்த என் போன்றவர்கள் என்ன செய்வது?'' என்றபோது அவையில் சிரிப்பு அலை எழுந்தது.

முதல் அமைச்சரின் 73-வது பிறந்த நாளின்போது கவிதைப்பித்தன் பாடிய கவிதை வரிகளைத் திருமதி. காஞ்சனா கமலநாதன் கூறினார்.

'மழலைபோல் முகம் சிரித்தபடி, மை போடாமல் கருத்த முடி, அழகு நிறமோதங்கப் பொடி, வயதோ 73 – எப்படி?'என்று அவர் கேட்டதைத் தொடர்ந்து ''சரி சரி இப்போது நீ முடி'' என்று துணைச்சபாநாயகர் பரிதி இளம் வழுதி கூறி அவையில் ஒரு கலகலப்பை உண்டாக்கினார்.

# அம்மா அப்பா

## மறைமலையடிகளார்

நில இயற்கைக்கு ஏற்றபடி அவ்வந் நிலங்களில் உறையும் பொருள்கள், சிற்றுயிர்கள், மக்கள் முதலியவற்றின் இயற்கைகளும் பல்வேறு வகைவகையாய்க் காணப்படுதலால், அவ்வந்நிலத்து மக்களின் குரலொலி களும் பலதிறப்பட்டுத் தோன்றுவனவாயினவென்று அறிதல் வேண்டும்.

பெரும்பாலுங் குளிர்மிகுந்த நாடுகளில் உறைவோரின் குரலொலிகள் உரத்த ஓசை வாய்ந்தனவாய் இருக்கின்றன. வெம்மை மிக்க இடங்களில் உள்ளாரின் குரலொலிகளோ மெல்லியவாயிருக்கின்றன; இரண்டிற்கும் நடுத்தரமான நிலங்களிலிருப்பவர் ஒலிகள் எடுத்த ஓசைக்கும் படுத்த ஓசைக்கும் நடுவாய் அமைகின்றன.

இவ்வுண்மை அவ்வந் நிலத்தின்கண் உள்ள பறவைகள் செய்யும் ஒலிகளின் வேற்றுமையாலும் நன்கு அறியப்படும். பனி மிகுந்த இங்கிலாந்து நாட்டில் உள்ள காக்கைகள் 'கிரா கிரா' என்று கரைகின்றன; சூடுங் குளிரும் ஒத்த நிலைமையில் அமைந்த இத் தமிழ்நாட்டுக் காக்கைகளோ 'கா, கா' என்று கரைகின்றன; ஆனதனால் ஆங்கில மொழியிற் காக்கைக்குக் 'குரோ' என்னும் பெயரும், நமது செந்தமிழ் மொழியில் 'காக்கை' 'காகம்' என்னும் பெயர்களும் வழங்கி வருகின்றன.

பனி நாடுகளிலிருப்பவர் மிடறு கரகரப்பாய் இருத்தல் இயற்கையாதலால், அவர்கட்கு இயல்பாக எழும் ஒலிகளிற் பெரும்பாலும் ரகரவோசை கலந்தே நிற்கும். குழந்தைகட்கு இயல்பாற் பிறக்கும் 'மா, பா' என்னும் முதல் ஒலிகளே இதற்குச்சான்றாம். பிள்ளைகள் வாயைத் திறக்குங்கால் அகரவொலி இயல்பாற் பிறக்கப் பிறகு திறந்த வாயின் இதழ்களை ஒன்று பொருத்துங்கால் மகரவொலி பிறக்க, இவ்வாறு வாயைத் திறந்து மூடுதலால் 'அம்மா' என்னுஞ் சொற்றோன்றித் தாய்க்குப் பெயராய் வழங்குதல் காண்கின்றோம். இங்ஙனமே, திறந்த வாயின் இதழ்களைச் சிறிது அழுந்தப் பொருத்துதலால் 'அப்பா' என்னுஞ் சொல் பிறந்து தந்தைக்குப் பெயராய் வழங்கப்படுகின்றன. இந்நிலவுலகத்தின்கண் உயிர் வாழும் எல்லா மக்களின் பிள்ளைகளும் அவர் ஒன்றோடொன்று வேறுபட்ட எத்தனைவகையான மொழிகளைப் பேசுவாராயினும், முதலில் இயல்பாகத் தோற்றுவிக்குஞ் சொற்கள் அம்மா அப்பா என்பவேயாம். இவ்விரண்டு சொற்களும் முதற்பிறக்கும் ஒலிகளாய் இருத்தலின், இவை எல்லா மொழிகளிலும் தாய்தந்தையரைக் குறிக்குஞ் சொற்களாகவே அமைவனவாயின.

உலகமெங்கும் ஒரேபடியாகத் தோன்றும் இவ்வியற்கை மொழிகளுங்கூட அவ்வந்நிலத்தின் றன்மையாற் சிறுசிறு வேறுபாடுடனுங் காணப்படா நிற்கின்றன. பனி மிகுந்த நாட்டில் உறைபவரான ஆங்கில மக்கள் மொழியில் 'மதர்' 'பாதர்' என்னுஞ் சொற்கள் தாய்தந்தையரைக் குறிப்பனவாய் இருக்கின்றன. பிள்ளைகட்கு முதலில் பிறக்கும் 'ம' என்னும் ஒலியே மதர் எனவும், அதன்பின் பிறக்கும் 'ப' என்னும் ஒலியே பாதர் எனவும் திருபெய்துகின்றன. இச்சொற்களில் ரகரவொலி விரவி நிற்றல் உற்றுணரற்பாலதாம். முன்னரே கூறியபடி, குறிராற் கரகரப்பான, மிடற்றின் கண்ரகரவொலி தோன்றல் இயல்பாதலின், மகார்க்கு இயற்கையே தோன்றிய இச்சொற்களிலும், மகார்க்கு இயற்கையே தோன்றிய இச்சொற்களிலும் அவ்ரகர வொலி விரவ, அவை மதர் பாதர் என ரகர வீற்றால் முடிந்தன.

நமது தமிழ் நாடாகிய இவ்விந்தியாவிற்புகுந்த ஆரியரும் வடக்கே மேருமலையைச் சூழ்ந்த பனி நாடுகளில் உறைந்தவர்களாதலின், அவரது ஆரிய மொழியின் கண் தாய் தந்தையரைக் குறிக்குஞ் சொற்களும் 'மாத்ரு' 'பித்ரு' என் ரகரவொலி விரவி நிற்கின்றன. இங்ஙனமே பனி நாடுகளில் வழங்கும் எல்லா மொழிகளிலும் தாய் தந்தையரைக் குறிக்கும் இப் பொதுச் சொற்களில் ரகரவொலி விரவி நிற்றல் காணப்படும்.

இவ்வாறு அவ்வந்நிலத்தின் இயல்புக்கேற்ப ஆங்காங்குறையும் மக்களிடத்துப் பலவகை வேறுபாடுகள் உண்டாதலால் அவர்களிடத்து இயல்பாற் பிறக்கும் ஒலிகளும் பலதிறப்படுகின்றன. அவ்வந்நிலங்களில் வேறுபாடுகள் அளவுக்கு அடங்காதனவாய் இருத்தலால் அவ்வேறுபாடுகளுக்கு உட்பட்ட மக்களிடத்துத் தோன்றும் ஒலி வேறுபாடுகளும் அளவுக்கு அடங்காதனவாயிருக்கின்றன.

ஆகவே, உலகத்தில் வழங்கும் ஒலிகள் அத்துணையும் அளந்தறிந்து முடிவு கட்டல் எவர்க்கும் ஏலாமையின், அவற்றை அறியப்புகுதலும் 'எமது மொழி எல்லா ஒலி வேறுபாடுகளும் முற்றும் உடையது' எனச் செருக்கிக் கூறுதலும் பயன்படாதனவாம். ஆகவே, எல்லா ஒலிவேறுபாடுகளையும் அளந்தறியப் புகுதலை விடுத்து, எல்லா ஒலிகளும் பிறத்தற்கு முதலாய் உள்ள சில ஒலி எழுத்துக்கள் எவையென்று அறிந்துகொள்ளுதலே பயன்மிகுதியும் உடையதாகும். ஒரே மொழியினுள்ளும் ஓர் எழுத்தாதல் ஒரு சொல்லாதல் பலராற் பல்வேறு வகையாகச் சொல்லப்படுதலை உற்று நோக்கிக் காண்பார்க்கு யாங்கூறும் இவ்வுண்மை நன்கு விளங்காநிற்கும்.

**– மறைத்திரு மறைமலையடிகளார் எழுதி,**
**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட**
**'அறிவுரைக்கோவை' என்ற நூலிலிருந்து.**

***(மறைமலையடிகள் நினைவு நாள் - 30.9.1950)***

**உலகின் எல்லாத் திசைகளிலிருந்தும் சிந்தனைகள் வந்து சேருவதற்கு வசதியாக நமது வாசல் கதவுகளையும், ஜன்னல் கதவுகளையும் திறந்தே வைத்திருக்க வேண்டும்.**

**– பண்டித நேரு**



# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

தமிழக அரசின் சார்பில் 1994 ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், நடிகர்கள், நடிகையர், தொழில் நுட்பக்கலைஞர்கள், கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது. 18.8.96 அன்று சிறப்புற நடைபெற்ற இவ்விழாவில் - அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், திரையுலகக் கலைஞர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழா எளிமையாகவும் அதே நேரத்தில் சிறப்பாகவும் நடைபெற்றது.

விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு.வ. முல்லைவேந்தன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

பின்பு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறந்த திரைப்படங்கள், நடிகர்கள், நடிகையர், தொழில் நுட்ப கலைஞர்கள் கலைத்துறை வித்தகர்கள் விருதுகளை வழங்கினார்.



விழாவில் கலந்து கொண்ட மேதகு ஆளுநர், 'சூப்பர் ஸ்டார்' ரஜினி காந்த் ஆகியோருக்கு நினைவுப் பரிசுகளை அரசின் சார்பில் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

**ரஜினிகாந்த் வாழ்த்து**

திரு ரஜினிகாந்த் வாழ்த்துரை வழங்கிய போது கூறியதாவது:

''இங்கு விருது பெற்ற கலைஞர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன். நான் முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்திப் பேசுவதற்கு எனக்கு வயதோ, அறிவோ இல்லை. ஆண்டவன் ரூபத்தில் வந்து இந்தத் தமிழ் நாட்டைக் கலைஞர்தான் காப்பாற்றியிருக்கிறார். இப்போது கலைஞர் எப்படி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை மயிலாப்பூரிலிருந்து, சைதாப்பேட்டையிலிருந்து, டெல்லி நாடாளுமன்ற வட்டாரம் வரையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திற்குள் பேசுகிற காலமும் வரும்.



இன்னொன்றையும் சொல்கிறேன். 89ல் சினிமா சம்பந்தப்பட்ட சம்பவம். அப்போது கலைஞர் முதல்வராக இருந்தார். என்னை அழைத்தார், நான் முதல்வர் வீட்டிற்குச் சென்றேன். திரு. மு.க. ஸ்டாலின் என்னை அழைத்துச்சென்றார். அப்போது கலைஞர் கேட்டார்," பூம்புகார் புரொடக்ஷனில் நீங்கள் படம் பண்ண என்னை உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லச் சொல்லி அமிர்தமும், செல்வமும் சொன்னார்கள். அவர்கள் என்ன சொன்னார்களோ அதை நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். நான் சொன்னேன் என்பதற்காக நீங்கள் படம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் படம் செய்யவில்லை என்றாலும் எனக்கு மகிழ்ச்சிதான், செய்தாலும் மகிழ்ச்சிதான். படம் செய்தாலும், செய்யா விட்டாலும் நீங்கள் எனக்கு நண்பர்தான். அவர்கள் உங்களிடம் கேட்டால் நான் சொல்லி விட்டதாகச் சொல்லிவிடுங்கள்'' என்றார்.

அதுதான் கலைஞர் அவர்களின் பெருந்தன்மை. அதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன்.



கலைஞர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன், நல்ல மன நிம்மதியுடன் வாழ்கிற வரைக்கும் முதலமைச்சராகவே வாழ்ந்து மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

**கலைஞர் பேருரை**

பிறகு, முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப்பேருரையாற்றினார். அதன் விவரம் வருமாறு:

"1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒரு குழுவின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கலைத்துறை நிபுணர்கள் -இவர்களுக்காக 95ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்க வேண்டிய பரிசுகளை 96ஆம் ஆண்டு நாம்தான் வழங்க வேண்டும் என்ற மக்களின் தீர்ப்புப்படி, இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயராலும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பெயராலும், ராஜா சாண்டோ அவர்களுடைய பெயராலும், கலைவாணர் அவர்களுடைய பெயராலும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பெயராலும் இந்த அரசு விருதுகளை வழங்கியிருக்கிறது.

கலையுலகம் எனக்குத் தாய்வீடு அல்ல; அரசியல்தான் எனக்குத் தாயகம். கலையுலகம் நான் புகுந்த வீடு; புகுந்த வீட்டில் என்னுடைய



பணிகளை நான் என்னால் இயன்ற அளவுக்கு ஆற்றியிருந்தாலும் கூட, சில மருமகள்களைப் போல எனக்குத் தாய்வீடு நினைவுதான் அதிகம். அந்த நினைவின் காரணமாகத் தான் இன்று உங்களுடைய தொண்டனாக, உங்களுடைய ஊழியனாக இந்த நாட்டுக்குச் சேவை புரிகின்ற சேவகனாக உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

இங்கே பரிசுகளை - விருதுகளைப் பெற்றவர்களையெல்லாம் தனித்தனியாக நான் வாழ்த்துவதற்கு நேரம் இல்லை. நான் அவர்களையெல்லாம் தனித்தனியாகப் பாராட்ட, வாழ்த்த இயலாத நிலையில் அவர்களெல்லாம் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் செய்ய வேண்டிய அந்தப் பணியைத் தம்பி ரஜினிகாந்த் அவர்கள் மிக அழகாக ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு, அவர்களையெல்லாம் வாழ்த்திப் பாராட்டிப் பேசியிருக்கின்றார். இப்படி என்னுடைய பணிகளை எப்போதும் தம்பி ரஜினிகாந்த் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

**ஆளுநர் உரை**



இந்த விழாவின் நிறைவாக மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையுரையாற்றினார். அப்போது: "கலைஞரை நான் தினந்தோறும் கவனித்துக் கொண்டிருக்கிறேன். சட்டப் பேரவை நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அரசில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் கவனித்துக்கொண்டிருக்கிறேன். அவற்றின் மூலம் தமிழ்நாடு மீண்டும் சட்ட மீறல்களிலிருந்தும், இதர மோசமான நிலைமைகளிலிருந்தும் விலகுவதற்கான நடவடிக்கைகளை முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பது தெரிகிறது.

சில தொழிலதிபர்கள் என்னைச் சந்தித்து, தாங்கள் முதலமைச்சரிடம் சுதந்திரமாகக் கருத்துக்களைச் சொல்ல முடிகிறது என்று கூறியுள்ளனர். இதன் மூலம் முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தொழில் மயமாக்கல்

மீண்டும் முக்கியப் பங்கு வகிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் உட்பட நண்பர்கள் அனைவருக்கும் நான் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம் 'நீங்கள் முதலமைச்சருக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தால் உயர்ந்த வளமும், வரலாறும், எல்லாத் துறைகளிலும் உயர்ந்து நிற்கும்,' தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியிலும் முன்னிலை வகிக்கும். அதை நான் உறுதியாக நம்புகிறேன்.

திரையுலகிலிருந்து பல தலைவர்கள் வந்துள்ளனர். தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களே இந்தியாவில் அதிகப் படங்களைத் தயாரிக்கின்றனர். எனவே திரையுலகத்தினரையும் இன்று விருது பெற்றவர்களையும் வாழ்த்துகிறேன். மீண்டும் தமிழ்நாடு அதற்குரிய பங்கையும், அங்கீகாரத்தையும் வாய்ப்பையும் பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.''

இவ்வாறு மேதகு ஆளுநர் அவர்கள் பேசிய பின்னர், செய்தி-சுற்றுலாத்துறை, செயலர் திரு.துரை சுந்தரேசன் நன்றி கூறினார்.



## விருது பெற்றோர் விவரம் :

**சிறந்த படங்களுக்கான விருதுகள்**

1. சிறந்த படம் - முதல் பரிசு :
**நாட்டாமை**

2. சிறந்த படம் - இரண்டாம் பரிசு :
**நம்மவர்**

3. சிறந்த படம் - மூன்றாம் பரிசு :
**பவித்ரா**

4. சிறந்த படம் - சிறப்புப் பரிசு :
**மோக முள்**

5. பெண்களைப் பற்றி சிறந்த முறையில் பிரதிபலிக்கின்ற நல்ல தமிழ்த் திரைப்படம் -
**கருத்தம்மா**

**கலைஞர்களுக்கான விருதுகள் :**

1. சிறந்த நடிகர்
**திரு. சரத்குமார்**

2. சிறந்த நடிகை
**செல்வி ராஜஸ்ரீ**

3. சிறந்த நடிகர் சிறப்புப் பரிசு
**திரு. நாகேஷ்**

4. சிறந்த நடிகை சிறப்புப் பரிசு
**செல்வி ஊர்வசி**

5. சிறந்த இயக்குநர்
**திரு. ரவிக்குமார்**

6. சிறந்த கதையாசிரியர்
**திரு. ஈரோடு சௌந்தர்**

7. சிறந்த உரையாடல் ஆசிரியர்
**திரு. பாலகுமாரன்**

8. சிறந்த இசையமைப்பாளர்
**திரு. ஏ.ஆர். ரகுமான்**

9. சிறந்த பாடல் ஆசிரியர்
**திரு. வைரமுத்து**

10. சிறந்த பின்னணிப் பாடகர்
**திரு. எஸ்.பி. பாலசுப்ரமணியம்**

11. சிறந்த பின்னணிப் பாடகி
**செல்வி. ஸ்வர்ணலதா**

12. சிறந்த ஒளிப்பதிவாளர்
**திரு. ஜீவா**

13. சிறந்த ஒலிப்பதிவாளர்
**திரு. ஸ்ரீதர், திரு. சிவக்குமார்**

14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்)
**திரு. லெனின், திரு. விஜயன்**

15. சிறந்த ஆர்ட் டைரக்டர்
**திரு. தோட்டாதரணி**

16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர்
**திரு. ராக்கி ராஜேஷ்**

17. சிறந்த நடன ஆசிரியர்



**திரு. சுந்தரம், திரு. ராஜு**

18. சிறந்த ஒப்பனைக் கலைஞர்
**திரு. சசி**

19. சிறந்த தையற் கலைஞர்
**திரு. காசி**

20. சிறந்த குழந்தை நட்சத்திரம்
**மோனிஷா**

**கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள்**

1. அறிஞர் அண்ணா விருது
**திரு. ஆரூர்தாஸ்**

2. பாவேந்தர் பாரதிதாசன் விருது
**கவிஞர் வாலி**

3. ராஜா சாண்டோ விருது
**திரு. எஸ்.பி. முத்துராமன்**

4. கலைவாணர் விருது
**திரு. செந்தில்**

5. எம்.ஜி.ஆர். விருது
**விஜய்காந்த்**

## நமது சொந்தம் இந்த நாடு!

நாமக்கல் கவிஞர்

இளந்தமிழா உன்னைக்காண
இன்பம் மிகவும் பெருகுது!
இதுவரைக்கும் எனக்கிருந்த
துன்பம்சற்றுக் குறையுது!

வளந்திகழ்ந்த வடிவினோடும்
வலிமைபேசி வந்தனை
வறுமைமிக்க அடிமை நிற்கு
வந்த ஊக்கம் கண்டுநான்

தளர்ந்திருந்த சோகம்விட்டுத்
தைரியங்கொண் டேனடா!
தமிழர் நாட்டின் மேன்மைமிகத்
தக்ககாலம் வந்ததோ!

குளிர்ந்தஉன்றன் உள்ளம்போலக்
குறைவிலாது நின்றுநீ
குற்றமற்ற சேவைசெய்து
கொற்றமோங்கி வாழ்குவாய்!

தமிழனென்ற பெருமையோடு
தலைநிமிர்ந்து நில்லடா!
தரணியெங்கும் இணையிலாஉன்
சரிதைகொண்டு செல்லடா!

அமிழ்தமென்ற தமிழினோசை
அண்டமுட்ட உலகெலாம்
அகில தேச மக்களுங்கண்
டாசைகொள்ளச் செய்துமேல்

கமழ்மணத்தின் தமிழில்மற்ற
நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில்
கதவிடித்துக் கொட்டியே

நமது சொந்தம் இந்த நாடு
நானிலத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்துவாழ்க நீண்டநாள்!

## மாணவர் பக்கம்

# படித்தவர் பண்பு



சுந்தரேசனின் ஒரே மகன் திருஞானம்; எப்போதும் ஏதாவது வால்தனம் செய்துகொண்டே இருப்பான். யாரையாவது வம்புக்கு இழுக்காவிட்டால், அன்று அவனுக்குத்தூக்கம் பிடிக்காது. உசிலம்பட்டியில் முக்கால் வாசிப்பேருக்கு, இதனாலேயே அவன் பிரசித்தம்.

வெளியில்தான் இப்படி என்பது இல்லை; வீட்டிலும்கூட சுட்டித்தனமாகத்தான் நடந்துகொள்ளுவான். அவன் தாயார் ஞானசுந்தரம் அவ்வளவாகப் படிக்காதவள். சுந்தரேசனோ கொஞ்சம் படித்திருந்தார். இதனாலேயே அவர் தனது மகன் திருஞானம் அதிகமாகப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். எப்பாடுபட்டாவது அவன் படிப்புக்காகச் செலவிட அவர் தயாராக இருந்தார்.

ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான், திருஞானம். தேர்வில் எல்லாம் ஓரளவுக்கு நல்ல படியாகவே மதிப்பெண்கள் எடுத்துவந்தான். மனப்பூர்வமாகப் படித்தால், இன்னும் நல்லவிதமாக விளங்கமுடியும் என்று வகுப்பு ஆசிரியர்சொன்னார். ஆனால், படிப்பில் அவ்வளவாக அவனுக்கு ஊக்கம் இல்லை.

காரணம் – அவனுக்கு ஏற்றபடி நான்கைந்து கூட்டாளிகள் சேர்ந்தார்கள். அவர்களில் மூன்று பேர் படிப்பு வாசனையே இல்லாதவர்கள். அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்துகொண்டு திரிந்தால் ஒருவனுக்குப் படிப்பில் அக்கறை ஏற்படுமோ?

அரைப்பரீட்சை வந்தது. திருஞானம் மிகக் குறைந்த மதிப்பெண்களே வாங்கியிருந்தான்.

தந்தையாரிடம் கையெழுத்து வாங்கி வரும்படி மதிப்பெண் விவர அட்டை அவனுக்குக் கொடுத்திருந்தார்கள். தாயாரோ படிக்காதவள்; தந்தையிடமோ அதைக் காட்ட முடியாது.

இந்த நிலையில், திருஞானம் ஒரு காரியம் செய்தான். தன் தந்தையார் சுந்தரேசன் போடுவது போல அவனே கையெழுத்துப் போட்டு எடுத்துப் போய் வகுப்பில் கொடுத்துவிட்டு வந்தான்.

இந்த விஷயம் சுந்தரேசனுக்குப் பக்கத்து வீட்டுப் பையன் பன்னீர் செல்வம் மூலம் தெரிந்துபோய்விட்டது. அவ்வளவுதான், பிரம்பை எடுத்துத் தனது கைவலிக்கிற வரை மகனை அடித்துவிட்டார் அவர். அதுமட்டுமல்ல; அன்று அவனுக்குச் சாப்பாடு போடக் கூடாது என்றும் தன் மனைவியிடம் சொல்லிவிட்டுச் சென்றார்.

ஆனால், ஞானசுந்தரத்தின் தாயுள்ளம் அதற்குக் கட்டுப்படவில்லை; அவன் அடி வாங்கியதே போதும் என்று நினைத்தாள் அவள். அதனால், சுந்தரேசனுக்குத் தெரியாமல் அவனைச் சாப்பிடச் செய்தாள்.

அதற்கு மறுநாளே வேறொரு சம்பவம் நடந்துவிட்டது.

திருஞானம் தன் கூட்டாளிகளோடு சேர்ந்துகொண்டு, பக்கத்து வீட்டுப் பையன் பன்னீர்செல்வத்தை வழிமறித்துச் செம்மையாக உதைத்துவிட்டான். இதையறிந்த சுந்தரேசன் துடிதுடித்துப் போனார்.

பன்னீர்செல்வம் பக்கத்து வீட்டுப் பையன் என்பதனால் அல்ல அது; அவன் மிகவும் நன்றாகப் படிக்கக்கூடியவன். பரம சாது. அவன் தந்தை தியாகராஜனும், சுந்தரேசனும் மிக நெருங்கிய நண்பர்கள். இதனாலேயே தன் மகனின் போக்



கைச் சுந்தரேசனால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

இந்தச் சம்பவம்பற்றி அறிந்ததும், தியாகராஜன் வீட்டுக்குப் போனார் சுந்தரேசன். அவர் மகன் பன்னீர்செல்வத்துக்கு மனப்பூர்வ மான ஆறுதல் சொன்னார். மகனால் ஏற்பட்ட விபரீதத்திற்காகத் தியாகராஜனிடமும் அவர் மகனிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''நமக்குள்ள என்னப்பா?'' என்றார் 'தியாகராஜன். அதுமட்டுமல்ல; ''திருஞானத்தை இப்படியே வளரவிட்டேன்னா.. வருங் காலத்துல இதாட்டமே ஊர்பூரா நீ மன்னிப்பு கேட்கும்படி இருக்கும். அவனைக் கொஞ்சம் பார்த்துக்க. அஞ்சுல வளையாததாஐம்பதுல வளையப்போவுது? கண்டிச்சு வை!'' என்றும் சொல்லி அனுப்பினார்.

நேரே வீட்டுக்குவந்தார் சுந்தரேசன். பெரிதாக ஏதோ நடக்கப்போகிறது என்று எதிர்பார்த்தாள் அவர் மனைவி ஞானசுந்தரம். அந்த பயத்தினாலேயே தனது மகன் திருஞானத்துக்குச் சீக்கிரமாகச் சாப்பாடு போட்டுப் படுக்க வைத்திருந்தாள்.

சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந் திருந்தாள் ஞானசுந்தரம். சுந்தரேசனோ, எதையுமே பேசவில்லை. உத்தரத்தையே பார்த்தபடி ஈஸிசேரில் மௌனமாகச் சாய்ந்திருந்தார்.

மெதுவாக அவர் முன்னால் போய் நின்றாள் அவள், ''என்னங்க, சாப்பாடு போடவா?'' என்று கேட்டாள்.

''இல்லே ஞானசுந்தரம், எனக்கு.. இன்னிக்குச் சாப்பாடு வேண்டாம்'' என்றார் சுந்தரேசன்.

திகைப்புடன், பதில் எதுவும் பேசாமல், தன் கணவரைக் கலக்கத்தோடு பார்த்தாள், அவள்.

''அடுத்த வீட்டு தியாகராஜனோட மகன் பன்னீர்செல்வம் இருக்கானே? அவன் இவனைவிடச்சின்னவன்தான். அவன் எப்படிப் படிக்கிறான்! ஆனா... ஒரு நாளாவது இவனைப்பத்தி நமக்குப் புகார் வராமெ இருந்தது உண்டா? திருஞானம் தப்பு பன்ற ஒவ்வொரு நாளும் ஒருவேளை அவனுக்குச் சாப்பாடு போடாதேன்னு நானும் சொல்லிக் கிட்டேவர்றேன். நீகேட்கிறதில்லை. அதனால... அவன் செய்யிற தப்புக்காக நான் ஒரு வேளை பட்டினி கிடக்கப்போறேன்.'' என்று மிகவும் வருத்தத்தோடு சொன்னார் சுந்தரேசன்.

இதைக்கேட்ட ஞானசுந்தரம் அப்படியே மனம் இடிந்து போய் உட்கார்ந்தாள். அதைத் தொடர்ந்தாற்போல சுந்தரேசன் சொன்னது இன்னும் அவளைத் திடுக்கிடச் செய்தது.

''முழுப் பரீட்சையில் அஞ்சு ரேங்குக்கு உள்ளாற திருஞானம் மார்க் வாங்கிப் பாஸ் பண்ணனும்; இல்லியோ, மதுரைக்குக் கொண்டு போய் அவனை ஹாஸ்டல்ல சேர்த்துடப் போறதா நான் தீர்மானிச்சுட்டேன்!'' என்று சொல்லிவிட்டுப் படுக்கையை விரித்தார் அவர்.

அந்த ஒரே ஒரு நாள் மட்டுமல்ல; வரிசை யாக இது போலப் பலநாட்கள் சுந்தரேசன் பட்டினி கிடக்க நேரிட்டது.

ஆண்டுத் தேர்வு வந்தது. அதன் முடிவும் தெரிந்தது. திருஞானம் வெற்றி பெற்றிருந்தான்; அதாவது இருபத் தைந்தாவது ரேங் கில்.



''இனிமேல் நல்லாப் படிப் பான்; விட்டு டுங்க'' என்று ஞானசுந்தரம் எவ் வளவோ மன் றாடினாள். சுந்த ரேசன் கேட்கவில்லை. மதுரை-வண்டியூரில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில், அவனை ஆறாம் வகுப்பில் சேர்க்க இடம் பிடித்தார். அந்தப் பள்ளிக்கூட மாணவர் விடுதியிலும் அவனைத் தங்கவைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அதற்குப் பிறகாவது திருஞானம் மனம் திருந்தி நடந்தானா, நல்லபெயர் வாங்கினானா என்றால் அதுதான் இல்லை. அங்கே கண்காணிப் பாளராக இருந்த ஒருவர், அவன் கொடுத்த தொல்லை தாங்காமல் வேறு ஊர்விடுதிக்கு வேலை மாற்றம் வாங்கிக் கொண்டே போய்விட்டார்!

மாணவர் விடுதிக்குப் புதிய கண்காணிப் பாளராகக் குணசேகரன் என்பவர் வந்து

> **தோழமைதான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்; இதைக் காணத்தான் சாதி தொலைய வேண்டும் என்றார் பாரதியார்.**
>
> **– அறிஞர் அண்ணா**

சேர்ந்தார். பெயருக்கேற்றபடி அவர் நல்ல குணவானாக இருந்தார். மாணவர்கள் எல்லோரிடமுமே மிகவும் அன்புடன் பழகினார். விடுதியைப் பொறுத்தவரை யார் என்ன குறை சொன்னாலும் உடனே அதை நீக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்.

முன்பு இருந்த விடுதிக் கண்காணிப் பாளரைப் போலவே புதிதாக வந்த குணசேகர னையும் விரட்டிவிடத் திருஞானம் முயன்றான்.

விடுதிக் காவலாளி நவநீதம் ஒரு தடவை திருஞானம் பற்றிப் புதிய கண்காணிப்பாளரிடம் சொன்னான். அவனை அமைதிப்படுத்தினார், அவர்.

திருஞானம் என்னதவறு செய்தாலும் கண்டு கொள்ள மாட்டார் அவர். ஒரு நாள் அவர் துவைத்துக் காயவைத்திருந்த வேட்டியில் இங்கை ஊற்றிவிட்டான், அவன்.

''நீங்க என்னை எவ்வளவு அவமானப்படுத் தினாலும் சரி தம்பி; எனக்குக் கோபம் வராது. ஏன்னா... உங்க மேல எல்லாம் நான் கோபப் பட்டுட்டேனா, நீங்க என்னை ஜெயிச்சுட்டதா அர்த்தம். அப்படி என்னை யாரும் ஜெயிக்க முடியாது. காற்றுள்ள போதே தூற்றிக்கணும்; சின்ன வயசுள்ள போதே படிச்சுக்கணும். என் வேட்டியில்பட்ட இங்க்கோட கறை சலவைக் குப் போட்டா போயிடும். ஆனா.. இந்த வயசுல உங்க மனசுல கறை விழுந்தா, படிப்புங்கிற சலவையாலதான் நீக்கமுடியுமே தவிர, வேற எப்படியும் அதை நீக்கமுடியாது. இதை மட்டும் மறந்துடாதீங்க'' என்றெல்லாம் எல்லோருக்கும் சொல்லுவது போல அவனுக்குப் புத்திமதி சொன்னார்.

அன்றிரவு, விடுதிக் காவலாளி ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டு வந்தான். அப்போது அவனுக்கும் திருஞானத்திற்கும் விடுதிக்கண்காணிப்பாளர்பற்றிப் பேச்சு வந்தது. அவரைப் பற்றித் தாறுமாறாகப் பேசினான், அவன்.

''குணசேகரன் சார் தங்கம்னா தங்கம்; தன்னை யார் என்ன பேசினாலும் அவர் அதைப் பொருட்படுத்தமாட்டார். ஏன்னா, அவர் உன்னாட்டம் முட்டாள் இல்லே, நிறையப் படிச்சிருக்கார். தன்னை ஒரு நாய் கடிச்சுட்டா திருப்பிக் கடிக்கிறது சரியான மனுஷத்தன மில்லை; அப்புறம் நாய்க்கும் மனுஷனுக்கும் வித்தியாசம் தெரியாமெல்ல போய்டும்?'' என்றான் காவலாளி.

அவன் இப்படிச் சொன்னதும் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது, திருஞானத் திற்கு. அவனை ஓங்கி அடித்துவிட்டான். நவநீதம் அதைப் பொறுத்துக் கொண்டு போய்விட்டான். கன்னத்தைத் தடவிக் கொண்டே பேசாமல் போய்விட்ட அவனை வியப்போடு பார்த்தான், திருஞானம். அவன் மனம் 'நீ செய்தது சரிதானா?' என்று அவனையே கேட்டது. இரவெல்லாம் தூக்கமில்லை.

விடுதிக்காவலாளி சொன்ன முரட்டு வார்த்தைகள் நாளடைவிலேயே திருஞானத்தை நல்லவனாக்கிவிட்டன. அமைதியாக எல்லோ ரிடமும் பழகலானான். ஒழுங்காகப் படிக்க ஆரம்பித்துவிட்டான் அவன். அவனை எல்லோ ரும் அதிசயத்தோடு பார்க்கலானார்கள்.

இதைப் போலவே ஒரு கருத்தை நாலடியார் பாடல் ஒன்று நமக்குக் காரசாரமாகத் தெரி விக்கிறது. இதோ அந்தப் பாடல்:

''கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்
கீழ் மக்கள் கீழாய் சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு''

**பொருள் :**

நாயானது வெறிகொண்டு நம்மைக் கடித்துவிட்டதே என்பதற்காகத் திருப்பி அதைக் கடித்தவர்கள் உலகில் உண்டா? அதைப் போலத் தகுதியின்றிக் கீழ் மக்கள் தகாத சொற்களைத் தம்மீது வீசினால், மேன்மக்கள் அதே சொற்களை அவர்கள் மேல் திருப்பி வீசுவார்களோ? ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டார்கள்!

**– 'நாலடியார் நீதிக் கதைகள்' நூலிலிருந்து**
**நன்றி : அண்ணாமலைப் பதிப்பகம், 1, கணபதி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.**

# எங்கள் ஊர் பிரச்சினை

'எங்கள் ஊர் பிரச்சினை' பகுதிக்கு வாசகர்களிடமிருந்து, கடிதங்கள் தினந்தோறும் வந்து குவிந்தவண்ணம் உள்ளன. தமிழ்நாட்டின் குக்கிராமங்கள், நகரங்கள் இப்படி எல்லா இடங்களிலிருந்தும் அந்தந்த ஊர்ப் பிரச்சினைகளைத்தாங்கி கடிதங்கள் வந்துள்ளன. அவைகளைப் பிரித்துத் தொகுத்துப் பிரச்சினைகளைப் பொறுத்து, உரிய அரசு அலுவலர்களுக்கு அனுப்பி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் 'தமிழரசு' இதழில் வெளியிடுகிறோம்.

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலிருந்து 44 மாணவ, மாணவிகள் தங்கள் பள்ளிக்கு ஆசிரியர்கள் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அவைகளைப் பரிசீலித்து, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. ரெ. நாராயணசாமி அவர்களைத் தொடர்பு கொண்டு நடிவடிக்கை எடுக்கச் சொன்னோம். அவரும் 'தமிழரசு'க்கு ஒத்துழைப்புக் கொடுத்து, மாணவ, மாணவிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்துள்ளார். மற்ற அலுவலர்களிடமிருந்து பதில்கள் வந்தவுடன் அவைகளும் தமிழரசில் வெளியிடப்படும். இப்பணி தொடரும்.

– ஆசிரியர்

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சின்னசேலம் ஒன்றியம், மட்டிகைக்குறிச்சி கிராமத்தில் இருநூற்று முப்பது மாணவர்கள் பயிலும் எட்டாம் வகுப்புவரை உள்ள எங்கள் ஊர் நடுநிலைப் பள்ளியில் இரு ஆசிரியர்களே உள்ளனர். நாங்கள் எப்படி கற்றுத் தேருவது. 'கற்கை நன்றே! கற்கை நன்றே! பிச்சைப் புகினும் கற்கை நன்றே!' பிச்சை - கேட்கின்றோம். ஆசிரியர்கள் நியமனப் பிச்சை கேட்கின்றோம். உரிய ஆசிரியர்களை நியமனம் செய்து எங்கள் புண்களைக் கண்களாக்குங்கள் என்று, உங்கள் தாள் பற்றி வணங்கி வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
**மாணவ, மாணவிகள்,**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
மட்டிகைக்குறிச்சி,
ஏர்வாய்ப்பட்டிணம் அஞ்சல்,
கள்ளக்குறிச்சி

## தீர்வு

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஒன்றியம், மட்டிகைக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 250 மாணவ, மாணவியர் பயின்று வருவதாகவும் ஆனால் இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர் எனவும் தமிழரசு பத்திரிகைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது தொடர்பாக கீழ்க் காணும் தகவல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மட்டிகைக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 30.6.96 அன்றுள்ளபடி மாணவர் பதிவு-வருகை கீழ்க்காணும்படி இருந்தது.

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| பதிவு | 91 | 107 | 198 |
| வருகை | 83 | 81 | 164 |

இப்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை மொத்தம் மூன்று.

இதில் ஒரு பணியிடம் காலியாக உள்ளது. இந்த ஆசிரியர் பணியிடத்தினை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இப்பள்ளிக்கு மாணவர்கள் வருகை அதிகமாக இருப்பதால் மாற்றுப் பணி மூலம் இரண்டு ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
**ரெ. நாராயணசாமி,**
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை - 6.



# வெளிச்ச விளக்குகள்

தனியானதோர் ஆற்றங்கரையின்
அமைதியில்
நீண்ட நாணல்களின் மத்தியில்
நான் அவளைக் கேட்டேன்;
''மாதே,
உனது விளக்கைத்
திரையிட்டுக் கொண்டு
எங்கே செல்லுகின்றாய்?
எனது இல்லமெலாம்
இருண்டு தனிமையில் கிடக்கிறது.
எனக்கு உனது விளக்கைக் கொடு!''

அவள் தனது கருவிழிகளை உயர்த்தி,
அந்தி இருளில்
என் முகத்தை உற்று நோக்கினாள்.
''எங்கும் இருள் கவிய
அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும்
ஆற்றில் என் விளக்கை மிதக்க விடவே
நான் இங்கே வந்திருக்கிறேன்''
என்று அவள் பதிலிறுத்தாள்.

நீண்ட நாணல்களின்
மத்தியில் நின்று கொண்டு
மங்கலான சுடருடன்
அவளுடைய விளக்கு
வெள்ளத்தின் மீது
பயனின்றி மிதந்தோடுவதைக்
கூர்ந்து கவனித்தேன்.
குவியும் இரவின் மௌன அமைதியில்
நான் கேட்டேன்;
''மாதே!
உன் விளக்குகள் யாவும்
ஏற்றப்பட்டன; இன்னும்
உனது விளக்குடன் எங்கு செல்லுகின்றாய்?

எனது வீடு
விளக்கற்று இருண்டு கிடக்கிறது
உனது விளக்கை இரவல் கொடு?''

அவள் என்
வார்த்தையைக் கேட்டதும் –
என் முகத்தின்பால்
தன்னுடைய கருவிழிகளை உயர்த்தி,
ஒரு நிமிஷம்
ஐயமுற்று நின்றாள்.
''எனது விளக்கை
விண்ணிற்கு அர்ப்பணிக்கவே
நான் வந்திருக்கிறேன்'' – என்று
பதிலளித்தாள்.



நான் நின்று கவனித்தேன்;
அவளுடைய வெளிச்சம்
வெட்டவெளியில்
பயனற்று எரிந்துகொண்டிருந்தது.



மதியின் ஒளிமுகம்
காணாத நள்ளிருளில்
நான் அவளைக் கேட்டேன் –
''மாதே அந்த விளக்கை
உன் இதயத்தினருகே பிடித்துக்கொண்டு
எதைத் தேடுகிறாய்?
என் வீடு தனிமையில் இருண்டு கிடக்கிறது
எனக்கு உனது வெளிச்சத்தைக் கொடு!''

ஒரு நிமிஷம் நின்று சிந்தித்தாள்;
இரவில் என் முகத்தை
உற்று நோக்கிக் கூறினாள்;
''வெளிச்ச விழாவைக் கொண்டாடவே
நான் எனது இந்த விளக்கைக்
கொண்டுவந்திருக்கிறேன்!''

நான் கவனித்தேன்,
அவளுடைய சிறு விளக்கு,
வெளிச்சங்களின்மத்தியில் பயனற்று மறைந்தது!
ஆனால், அவளுடைய புன்னகை
என்னுள் மின்னலிட்டுக் கொண்டிருந்தது!

– தாகூரின் கீதாஞ்சலி

நன்றி : கற்பகம் புத்தகாலயம்,
18, ராஜாபாதர் தெரு, சென்னை – 600 017.

# செய்திச் சரம்

## அண்டார்ட்டிகாவைக் காப்போம்

சுற்றுப்புறச் சூழல் கேடுகளின் உச்சகட்டமாக உலக தட்ப வெப்ப நிலை உயர்வினால் அண்டார்டிகாவில் உள்ள பனிக் கட்டிகள் உருக ஆரம்பித்து விட்டது. இந்நிலை தொடருமேயானால் உலகெங்கும் உள்ள பல தீவுகள் அரிய தாவர வகைகள் மற்றும் விலங்கினங்கள் அழியும் அபாய நிலையில் உள்ளது. இத்தகைய அழிவுகளை உலகிற்கு எடுத்துரைத்து, சுற்றுப்புறச் சூழல் மாசுபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த திரு. சா. சீனுவாசராவ், இரா. ஞானசேகரன் ஆகியோர் உலகப் பயணமாக ''அண்டார்ட்டிகாவை பாதுகாப்போம்'' என்ற முழக்கத்தோடு மாருதி சென் வாகனத்தில் பயணம் கொள்கின்றனர்.

இவர்கள் பயணத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 13.8.96 அன்று சென்னை உழைப்பாளர் சிலை அருகில் கொடியசைத்துத் துவக்கி வைத்து, தனது உரையில் இந்த இளம் இளைஞர்களின் பயணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2 இலட்சம் வழங்குவதாக அறிவித்தார். இந்த எளிய நிகழ்ச்சிக்குப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் அவர்கள் தலைமை ஏற்றார். சட்டமன்றப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பேராசிரியர் தீரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சைதை கா. கிட்டு, எடப்பாடி கணேசன், திரு மணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திரு.வி.க. விருது

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பெயரால் ஆண்டுதோறும் சிறந்த தமிழறிஞர் ஒருவருக்கு 1979 முதல் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்புச் செய்வது அரசின் நடைமுறையில் உள்ளது. 1979ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை 17 தமிழறிஞர்களுக்கு 'திரு.வி.க. விருது' வழங்கப் பட்டுள்ளது. 1996-ஆம் ஆண்டு தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது, முனைவர் மா. நன்னன் அவர்களுக்கு வழங்கப் பெறுகிறது. விருதுத் தொகை ரூ. 20,000/- ஆக உயர்த்தி வழங்கப்பெறுகிறது.

## இடைக்கால நிவாரணம்

தமிழ்நாடு அரசு, 1.1.1996க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/ பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட திங்கள் ஒன்றுக்கு ரூ. 150/- கருணைத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநிலப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்டப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு 1.4.1995 முதற்கொண்டு, மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற அளவிற்குட்பட்டு மேலும் 10 விழுக்காடு கருணைத் தொகையுடன் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற குறைந்த பட்ச அளவிற்குட்பட்டு இடைக்கால நிவாரணத் தொகை வழங்க முடிவெடுத்து உள்ளது.

## காணாமல் போன மீனவர் மீட்பு

கடந்த ஜுன் மாதம் தமிழகத்தில் வீசிய புயல், மழையிலே சிக்கி கடலிலே மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்கள் பகுதி பகுதியாக சென்னை வந்து கொண்டிருக்கின்றனர். கடைசியாக 13.8.96ல் ஐந்து மீனவர்கள் பங்களாத்தேஷிலிருந்து சென்னை திரும்பியிருக் கின்றனர். இதற்கு முன்பு 22-7-96 அன்று மூன்று மீனவர்கள் டாக்கா நகரிலிருந்து சென்னை வந்து சேர்ந்தனர். மேலும் 12 மீனவர்கள், பங்களா தேஷில் இருப்பதாக இந்தியத் தூதுவரகம் மூலமாகச் செய்தி வந்ததின் பேரில், அவர்களையும் பத்திரமாகத் தமிழகத்திற்கு அழைத்துவர இரண்டு அதிகாரிகள் தமிழக அரசின் சார்பாக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

### வீட்டுவசதி பற்றி கலந்துரையாடல்

வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் அவற்றைத் தீர்வு செய்து விரைவில் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மத்திய நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர். யு. வெங்கடேஸ்வரலு அவர்களுடன் 7.8.96 அன்று தலைமைச்செயலகத்தில் கலந்துரையாடினார்.

ஏற்கெனவே செயல்படுத்தி வந்த நடைபாதை வாசிகளுக்கான குடியிருப்பு திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த மத்திய அரசு மான்ய உதவி அளிக்க வேண்டும் எனவும், மத்தியதர வர்க்கத்தினருக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட வேண்டும் எனவும், வீடு கட்ட அளிக்கப்படும் கடன் தொகை திருப்பியளிப்பதற்கான கால அளவு 10 ஆண்டு என்பதை 15 ஆண்டுகள் என உயர்த்திட வேண்டும் எனவும், ஹட்கோ 'நிறுவன நிர்வாகக்' குழுவின் அமைப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தை சேர்ந்த ஒருவரை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு மத்திய நகர்புற அமைச்சர் அவர்கள் பேசுகையில் தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் எனவும், அக்டோபர் 7 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை புதுதில்லியில் ஒரு கருத்தரங்கு வீட்டு வசதித் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

உலகக் குடியிருப்போர் நாள் (World Habitat Day) என்ற வகையில் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

### காவிரி நீர்த்தேக்கம் – அரசின் நிலை

கர்நாடக அரசு மேகதாதுவில் பல் பயன் பெறும் வகையில் ஒரு நீர்த் தேக்கத்தைக் காவிரி நதியில் கட்ட ஒரு திட்டம் தீட்டியிருப்பதாக பெங்களூரிலிருந்து வெளியான செய்தி சில நாள் இதழ்களில் 9.8.1996 அன்று வெளிவந்துள்ளது. இது குறித்து தமிழக அரசின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு தீட்டியதாகக் கூறப்படும் திட்டத்தைப் பற்றியோ அதன் விவரங்களைப் பற்றியோ தமிழக அரசுக்கு ஒருவிதத் தகவலும் இல்லை. 5.8.1996-ல் இரு மாநில முதலமைச்சர்களும் சந்தித்துப் பேசியபொழுது இந்தப் பொருள் அதில் இடம்பெறவில்லை. தமிழக அரசு அப்படிப்பட்ட திட்டத்திற்கு இசையவில்லை.

அப்படி ஒரு திட்டம் வகுக்கப்பட்டால், அதன் முழு விவரங்களும், காவிரி ஆற்றின் கீழ்ப்பகுதி மாநிலங்களில் நிலையான பாசனத்திற்கு அத்திட்டத்தால் ஏற்படும் விளைவுகள், பாதிப்பு எல்லாவற்றையும் ஆராய்வது முதல் தேவை. இது இன்றியமையாதது. இவ்வித ஆய்வுக்காக வாய்ப்பு இன்றி மத்திய அரசின் ஒப்புதலுக்கும் நிதி ஒதுக்கீட்டுக்கும் இத்திட்டத்திற்குக் கூட்டு ஆதரவு அளித்து பிரேரணை செய்ய இந்த அரசு முன்வராது.

காவிரி நீரைப் பல்பயன்பெறும் திட்டத்திற்கு உபயோகிப்பதானால் அந்நீரில் பாசனத் தேவைகள் முதற்கண் முன்னுரிமை பெற்றவை. பிற உபயோகங்கள் எல்லாம் பாசனத்தேவைகளுக்குக்கட்டுப்பட்டவை. அத்திட்டங்களைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே பிற உபயோகங்கள் அமைதல் வேண்டும். எடுத்த எடுப்பிலேயே, இந்த அடிப்படைக் கட்டுப்பாட்டை உத்தேசத் திட்டம் கடைப்பிடிக்கவில்லை என்பது வெளிப்படை.

1982-ஆம்ஆண்டிலே அன்றைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், இந்தியப் பிரதமர், மத்திய அமைச்சர்கள், அன்றைய கர்நாடக முதல்அமைச்சர் திரு. குண்டுராவ் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தில் மேலே கூறிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தி இருக்கிறார். அக் கடிதத்தில் கர்நாடக அரசு தன்னிச்சையாக எந்தத் திட்டங்களையும் மேற்கொள்ளக்கூடாது. கீழ் பாசனம் உள்ள மாநிலங்களில் பாசன உரிமைகளுக்கு முழு பாதுகாப்பு அளிக்காமல் அத்திட்டத்தை அனுமதிக்கலாகாது என்றும் மத்திய அரசுக்கு வலியுறுத்தப் பட்டுள்ளது. இந்த நிலையை தமிழக அரசு உறுதிப் படுத்துகிறது.

**செய்திச் சரம்**

# படமும் செய்தியும்



மலேசியாவில் நடைபெறும்
காமன் வெல்த் பாராளுமன்றக்
கருத்தரங்கில் கலந்துகொள்ளச்
சென்ற மாண்புமிகு தமிழக
சட்டப்பேரவைத் தலைவர்
பி.டி.ஆர். பழனிவேல்ராஜன்
அவர்கள், மாண்புமிகு தமிழக
முதல்வர் அவர்களைச் சந்தித்து
வாழ்த்துப் பெற்றார் (16.8.96).



தமிழ்நாடு மின்வாரிய நிர்வாகப்
பணியாளர்கள் மற்றும்
அலுவலர்கள் சங்க
இரண்டாவது மாநில
மாநாட்டை, சென்னையில்
துவக்கிவைத்துச்
சிறப்புரையாற்றிய மாண்புமிகு
மின்துறை அமைச்சர்
திரு. ஆர்க்காடு என். வீராசாமி
அவர்களுக்குச் சங்கத்தின்
சார்பில் நினைவுப் பரிசு
வழங்கினார் (18.8.96).



முன்னாள் இந்திய கிரிக்கெட்
விளையாட்டுக் குழுவின்
தலைவர் திரு. அசாருதீன்,
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர் கலைஞர்
அவர்களைச் சந்தித்து
வாழ்த்துத் தெரிவித்தார் (19.8.96).



மாண்புமிகு தமிழக முதல்வர்
கலைஞர் அவர்களை மத்திய
ஊரக வளர்ச்சி மற்றும் வேலை
வாய்ப்புத்துறை அமைச்சர்
திரு எர்ரான் நாயுடு அவர்கள்
தலைமைச் செயலகத்தில்
சந்தித்துப் பேசினார்.
மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர் திரு. கோ.சி. மணி
உடன் உள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ்காந்தியின் பிறந்த நாளையொட்டி, அன்னாரது படத்துக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து, தலைமைச் செயலகத்தில் மத நல்லிணக்க உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது (21.8.96).



தென்னகப் பண்பாட்டு மையம், அகில இந்திய மரபு மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளை, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் உடன் உள்ளார் (13.8.96).




சென்னை உணவு மற்றும் பொதுவிநியோகக் கழகங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வே. தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர் (16.8.96).



# அம்மா எங்கே?

## பசவராஜ கட்டிமணி

**"பா**லீஷ்... பூட்பாலீஷ்!"

ரெயில்வே ஸ்டேஷன், பஸ் நிற்கும் இடம், சினிமா கொட்டகை, நாடகக் கொட்டகை, உணவு விடுதிகள், டீக் கடை முதலியவற்றின் அருகே என்னுடைய இந்தக் கூக்குரலை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.



**"...என், குரல் காதில் விழுந்தவுடன் நீங்கள் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்கிறீர்கள். புருவத்தை நெறிக்கிறீர்கள். பார்வையைக் கடுமையாக்கிக் கொள்கிறீர்கள். அந்தப் பார்வை அம்பின் தாக்குதலுக்குப் பயப்படுபவன் நான் அல்ல..."**

இந்தக் கூவல் உங்களுக்கு அலுப்பைத் தரும் அளவுக்குப் பழக்கப்பட்டிருக்கும். பூந்தோட்டத்தில் உங்கள் புதிய மனைவியுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாலும் சரி; தினசரியைப் பாடித்துக் கொண்டு ரெயிலுக்காகக் காத்திருந்தாலும் சரி; டிக்கட் வாங்கவென்று கியூவரிசையில் நின்றிருந்தாலும் சரி; அவசர அவசரமாக ரயிலிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாலும் சரி; பசியோடு சாப்பிடுவதற்காக ஓடிக் கொண்டிருந்தாலும் சரிதான். நான் அதையெல்லாம் கவனிப்பதில்லை. என் நினைவு ஒன்றுதான்; பூட் பாலிஷ். என் லட்சியம் ஒன்றுதான்; ஓரணா சம்பாத்தியம்.

என், குரல் காதில் விழுந்தவுடன் நீங்கள் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்கிறீர்கள். புருவத்தை நெறிக்கிறீர்கள். பார்வையை கடுமையாக்கிக் கொள்கிறீர்கள். அந்தப் பார்வை அம்பின் தாக்குதலுக்குப் பயப்படுவன் நான் அல்ல. அவையெல்லாம் எனக்குப் பழகிவிட்டவை. நீங்கள் முரட்டுக் குரலில், ''வேண்டாம்'' என்றாலும் பின்னடையாமல் கீழே உட்கார்ந்து உங்கள் பூட்ஸ்களில் கைவைப்பேன். 'அதிகம் இல்லை ஐயா' ஒரே அணா. சுத்தமாகப் பாலிஷ் செய்வேன். கண்ணாடிப்போல் பளபளவென்று செய்து கொடுப்பேன். என்று பணிவுமிக்க குரலில் சொல்வேன். என் தோளிலிருந்து தொங்கும் சிறு பையைத் தரையில் வைத்து அதிலிருந்த பிரஷ்ஷையும் பாலிஷ் டப்பியையும் எடுத்துத் தயார்செய்வேன். இந்தச்சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்டவர்களுக்கும், 'பாலிஷ் போடச் சொல்லலாமா?' என்று தோன்றாமல் இராது. என்ன, பிரமாதம்! ஓரணாதானே! சரி' என்று எண்ணிப் பாதரட்சைகளைக் கழட்டிக் கொடுப்பார்கள். அங்கேயே உட்கார்ந்துகொண்டு நான் என்னுடைய வேலையைத் தொடங்குவேன். முதலில் அவற்றின்மேல் படிந்த தூசியை' எல்லாம் துடைப்பது, பிறகு பாலிஷ் செய்வது, பிரஷ்ஷை வலக்கையிலும் பாதரட்சையை இடக்கையிலும் பிடித்து வேகமாகத் தேய்ப்பது. அப்போது என் கையின் ஓட்டத்தைப் பார்த்துக்கொண்டு நிற்பதே உங்களுக்கு இன்பமாக இருக்கும். பாதரட்சையின்மேல் பிரஷ்ஷை அசைத்த வண்ணம் என் கை எப்படித்தான் ஓடும்! எவ்வளவு கைதேர்ந்த வேலைக்காரனானாலும் அதைக் கண்டு வெட்கப்பட வேண்டும். இந்தத் திறமை சும்மா வந்துவிடுமா? அதற்கும் அனுபவம் வேண்டும், சுவாமி! அனுபவம் வேண்டும்! இந்த வித்தையின் நெளிவு சுளிவெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

என் கன்றிய முகத்தையும் அழுக்கு உடையையும் பார்த்து என் வயதைத் தெரிந்து கொண்டு, 'இவனுக்கென்ன பிரமாத அனுபவம் இருக்கப் போகிறது?' என்று சொல்லாதீர்கள். என் ஐந்தாம் வயதில் தொடங்கி இதுவரையிலும் பத்து வருஷ காலம் பூட் பாலிஷ் தவிர வேறு வேலையே எனக்கு இல்லை. பூட் பாலிஷ் என்றால் நான் - நான் என்றால் பூட் பாலிஷ் என்னும்படி நான் அத்துடன் ஒன்றிப் போய்விட்டேன். என்னைப் பொறுத்தமட்டில் வேறு உலகமே இல்லை. பூட் பாலிஷே என் உலகம். அதை விட்டால் எனக்கு வேறு கதியே இல்லை.

நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்கள் அல்லவா? அப்படி ஆச்சரியப்படக் காரணம் இல்லை சுவாமி! இந்த உலகத்தில் என்னைச் சேர்ந்தவன் நான் ஒருவன்தான். அப்பா அம்மாவின் முகத்தை நான் பார்த்ததே இல்லை. என் அப்பா யார், அம்மா யார் என்பதே எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு தெரியும் வயதில் பிச்சைக்காரன் ஒருவன் என்னை வளர்த்துக் கொண்டிருந்தான். என்னைப் போலவே பரதேசிகளாக இருந்த பத்துப் பனிரெண்டு சிறுவர்கள் அவனுடன் இருந்தார்கள். நகருக்கு வெளியே யிருந்த பாழடைந்த தருமச் சத்திரம் ஒன்றில் நாங்கள் எல்லோரும் வசித்துக் கொண்டிருந் தோம். சிறுவர்கள் எல்லோருக்கும் இதே வேலைதான்; பூட் பாலிஷ். காலையிலிருந்து இரவு வரையில் நாங்கள் எல் லோரும் வேலை செய்துவந்த பணத்தைக் கொண்டுவந்து அவனிடம் கொடுப்போம். அவன் எங்களுக்கெல்லாம் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய பெயர்கூட எனக்குத் தெரியாது; பாவம்! கிழவன். இருமல் நோயினால் உடம்பு வெகு பலவீனமாகி எப்பொழுதும் படுக்கையிலேயே படுத்துக் கொண்டிருந்தான்.

அந்த நிலையிலும் எழுந்திருந்து தர்ம சத்திரத்தின் ஒரு மூலையில் இருந்த கல்லடுப்பில் அரிசியைக் கொதிக்க வைத்து நாங்கள் வரும் வேளைக்குச் சாப்பாட்டைத் தயாரித்து வைத்துக்கொண்டிருப்பான். எங்கள் எல்லோரையும் தன் வயிற்றில் பிறந்த குழந்தைகள் போலப்பார்த்துக் கொண்டு அன்புடன் சாப்பிடச் செய்வான். நாங்கள் எல்லோரும் அவனைத், 'தாத்தா' என்று அழைப்போம். கிழவன் ஒரு நாள் இறந்துவிட்டான். நாங்கள் மறுபடியும் அநாதைகளா



னோம்; எங்கள் கூட்டம் கலைந்துவிட்டது. நாங்கள் எல்லோரும் எங்கள் காலை ஊன்றிக்கொண்டு வாழ்க்கையை நடத்தக் கற்றுக் கொண்டோம்.

ஒருநாள்-அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எனக்கு உடம்பு சரியில்லை; சுட்டது. ''இன்றைக்கு வேலைக்குப் போகவேண்டாம். குழந்தை சுகமாகப் படுத்துக்கொள்'' என்று சொல்லித் தாத்தா என்னை ஒரு கோணிப் பையின் மேல் படுக்கவைத்திருந்தார். வேறொரு கோணிப்பையைப் போர்த்துக்கொண்டு ஜுரத்தினால் கனத்துவிட்ட கண்களை மூடிக்கொண்டு நான் படுத்துக் கொண்டிருந்தேன். என்



**''...என் தாய் சாகவில்லை. உயிரோடிருக் கிறாள். சுகமாகக் காலந் தள்ளுகிறாள் என்பது தெரிந்ததும் என் உள்ளம் பயங்கரமாக ஓலமிடத் தொடங்கியது...''**

பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு என் நெற்றியைத் தடவிய வண்ணம் தாத்தா இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தார். ''ஜுரம் வந்து நீ இங்கே விழுந்து கிடக்கிறாய். உன்னுடைய தாய் இப்போது எங்கே இருக்கிறாளோ? எவ்வளவுசுகப்படுகிறாளோ?...''

''என் தாய்?....''

என் தாய் உயிருடன் இருக்கலாம் என்பது அப்போதுதான் தெரிந்தது. எல்லோருக்கும் தாய் ஒருத்தி இருப்பதுபோல் எனக்கும் இருக்கத்தான் வேண்டும் என்பதுதான் எனக்குத் தெரியும். ஆனால் நான் பிறந்ததுமே அவள் இறந்து போயிருக்க வேண்டும். என் தந்தையும் இறந்திருக்க வேண்டும் என்று நான் நினைத் திருந்தேன். ஆனால் என் தாய் சாகவில்லை. உயிரோடிருக் கிறாள். சுகமாகக் காலந் தள்ளுகிறாள் என்பது தெரிந்ததும் என் உள்ளம் பயங்கரமாக ஓலமிடத் தொடங்கியது; தாய்... என் தாய்... நான் அவளைக் காண வேண்டும்... அவளுடைய மடியில் முகத்தை மறைத்துக் கொண்டு படுக்கவேண்டும்'' என்றெல்லாம் தோன்றியது.

''எங்கிருக்கிறாள் தாத்தா. என் அம்மா?'' என்று கேட்டேன்

தாத்தா என் தலைமயிரைக் கோதிக்கொண்டே என்னைச் சமாதானப்படுத்தும் தோரணையில், ''எங்கிருக்கிறாளோ, யாருக்குத் தெரியும் அப்பா? எங்கேயோ இருப்பது மட்டும் நிஜம்.''

''நீ அவளைப் பார்த்திருக்கிறாயா தாத்தா?''

''இல்லை குழந்தை. பார்த்திருந்தால் நீ ஏன் இங்கிருக்கிறாய். இந்த நிலை ஏன்? வேறு ஏதாவது ஏற்பாடு செய்திருப்பாள்.''

கிழவர் இன்னும் ஏதேதோ சொன்னார். அதெல்லாம் எனக்குப் புரியவில்லை. என் தாய்க்கு மணமாகு முன்பே யாரோ அவளைக் கெடுத்து விட்டானாம். அதன் பயனாக நான் பிறந்தேன். அவள், சமூகத்துக்குப் பயந்து குழந்தையாக இருந்த என்னைக்கொண்டு வந்து அனுமார் கோவிலில் வைத்துவிட்டுப் போனாளாம். அதெல்லாம் வேறு ஏதோ ஊரில் நடந்தது. கோவிலுக்குச் சற்று தூரத்தில் தங்கியிருந்த தாத்தா என்னைக் கண்டு இரங்கி எடுத்து வளர்த்தாராம். அப்பொழுது அவரோடு வசித்து வந்த பிச்சைக்கார தம்பதிகள் என்னைக் குழந்தைப்போல பார்த்துக் கொண்டார்களாம் அந்த பிச்சைக்காரியின் பாலைக் குடித்துத்தான் நான் வளர்ந்தேன். சில நாட்களுக்குப் பின் அவளும் இறந்து விட்டாளாம்.'' என் அம்மா என்னை அப்படி ஏன் விட்டுவிட்டுப் போனாள் தாத்தா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் உனக்குப் புரியாது. சில பெரிய மனிதர்கள் வீட்டில் அப்படி அடிக்கடி நடப்பதுண்டு. அதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம். சும்மாப் படுத்துக்கோ குழந்தை; உனக்கு நிறைய ஜுரம் வந்திருக்கிறது.''

''என் அம்மா இப்பொழுதும் உயிரோடு இருப்பாளா தாத்தா?''

''இருக்கத்தான் வேண்டும். வேறொருவனைக் கல்யாணம் செய்து கொண்டு சுகமாகக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கலாம்.''

''அவளுக்கு என் நினைவு இருக்குமா தாத்தா?''

''கட்டாயம் இருக்கத்தான் வேண்டும். அன்று சமூகத்துக்குப் பயந்து அவள் உன்னை விட்டுவிட்டுப் போகநேர்ந்தது.

ஆனால் பெற்ற வயிறு வருந்தாமல் இருக்குமா, தம்பி? இன்னும்அவள்உன்னைநினைத்துக் கொண்டிருக்கலாம். உனக்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கலாம்.''

தாத்தாவினுடைய இந்தச் சொற்களால் எனக்குத் துக்கம் பொங்கிவந்தது. என்றும் காணாத அந்தத் தாயை நினைத்து விக்கி விக்கி அழுதேன்.

''என் தாய்... தாத்தா! நான் என் அம்மாவைப் பார்க்க வேண்டும். ஏதாவது வழி செய். அம்மாவைத் தேடு'' என்று அழுதேன்.

தாத்தா பேசாமல் உட்கார்ந்துகொண்டு என்னைச்சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

அன்றுமுதல் இரண்டொரு வருஷகாலம் எனக்கு அம்மா பைத்தியம் பிடித்திருந்தது. பூட்பாலிஷ் செய்துகொண்டு அங்குமிங்கும் அலையும் போதெல்லாம் புடவைத் தலைப்பைக் கண்டபோதெல்லாம் அந்தப்பெண்மணியின்முகத்தை ஆவலுடன் பார்த்துக்கொண்டு நிற்பேன். சின்னஞ்சிறு குழந்தைகளை இடுப்பில் எடுத்துக் கொண்டு ரயிலேறும் சுமங்கலிகளைக் கண்ட போதெல்லாம் என் உள்ளம் கொந்தளிக்கும். ''அவர்களுள் யாராவது என் அம்மாவாக இருக்கலாமோ? என்ற ஆசை மேலிட்ட கண்களோடு பெருமூச்சு விட்டுக் கொண்டு நிற்பேன். பட்டுச் சேலை உடுத்துச் சொகுசாக அலங்காரம் செய்துகொண்டு சினிமாவுக்குப் புறப்படும் பெண்களைப் பார்த்துக் கொண்டே நின்று, ''இவர்களுள் யாராவது ஒருத்தி என் அம்மாவாக இருக்கலாம்'' என்று நினைப்பேன்.

ஒருநாள் இந்த மாதிரி நாடகக் கொட்டகை ஒன்றின் வாயிலில் நிற்கும்போது நடுத்தர வயதுள்ள தம்பதிகள் இருவர் காரிலிருந்து இறங்கினார்கள். அவர்கள் பெரும் செல்வர்கள் என்பது தெளிவாக தெரிந்தது. வாயிலின் மூலையில் நின்று கொண்டு பார்வையில் ஆசை கொப்புளிக்க நான் அந்த அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தற்செயலாக அவளுடைய பார்வையும் என் பக்கம் திரும்பியது. என் நெஞ்சு, பட பட வென்று அடித்துக்கொள்ளத் தொடங்கியது. என்னை அவள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். வெண்மையான அந்த பரந்த முகத்தில் எப்படிப்பட்ட பாசம்.. பெரிய பெரிய அந்த அழகிய கண்களில் எத்தனை அன்பு! என்றோ இழந்துவிட்ட சொந்தக் குழந்தையைக் கண்டவுடன் இழுத்து அணைத்து எடுத்துக் கொள்ளத் துடிக்கும் தாய் போலவே அவள் என்னைப் பார்த்தாள். மகிழ்ச்சியின் மிகுதியால்என்உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது. அப்பாடா! கடைசியில் என் தாய் கிடைத்துவிட்டாள்! கடவுள் இரங்கிவிட்டார். என் தாயை எனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார். ''அம்மா... என் அம்மா! ஐயோ; எத்தனை நாட்களாக உனக்காகக்காத்திருந்தேன். உன் தோள்களில் உட்கார்ந்து உன் புடவைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக் கொள்ள எவ்வளவு ஆவலாக இருந்தேன். அம்மா!...''

என்னுடைய அழுக்கு உடை, கன்றிய முகம், குளிக்காமல் அழுக்கேறிய உடம்பு, சிக்குப் பிடித்து நாறும் தலை எல்லாவற்றையும் நான் அப்பொழுது மறந்துவிட்டேன். நான் ஒரு பூட்பாலிஷ் பையன் என்னும் நினைவு அப்போது எனக்கு இருக்கவில்லை. அன்பின் அற்புதமான மாயையால் நான் இவ் வுலகையே மறந்து விட்டு வேறொரு கனவுலகில் சஞ்சரிப்பதுபோல் இருந்தது. ஆவலுடன் இரண்டு கைகளையும் நீட்டி அம்மாவை அணைத்துக் கொள்ளவிருந்தேன். அவள் ஒரு கணம் நின்ற இடத்திலேயே நின்றாள். என்னை ஆவலுடனும், ஏக்கத்துடனும் கூர்ந்து பார்த்துத் தன் கைப்பையிலிருந்து ரூபாய் நாணயம்



**''... அம்மா... என் அம்மா! ஐயோ; எத்தனை நாட்களாக உனக்காகக் காத்திருந் தேன். உன் தோள்களில் உட்கார்ந்து உன் புடவைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக்கொள்ள எவ்வளவு ஆவலாக இருந்தேன். அம்மா!...''**

ஒன்றை எடுத்து என் கையில் கொடுத்தாள். அருகில் இருந்த அவளுடைய கணவர் நாடகத்துக்கு நேரம் ஆகிவிட்டதென்று அவசரப்படுத்திக்கொண்டிருந்தார். அவள் கடைசித் தடவையாக என்னை அன்புடன் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சுடன் மெதுவாக நடந்துசென்றாள்.

அன்று எனக்கு வாழ்வே வேண்டாம் என்று ஆகிவிட்டது. அந்த அம்மாள் கொடுத்த ரூபாயைச் சாக்கடையில் வீசி விட்டுத் தியேட்டரின் எதிரில் இருந்த டீக்கடைத் திண்ணை மேல் அழுதுகொண்டே விழுந்து கிடந்தேன். எல்லோருக்கும் ஒரு தாய் இருப்பாள். எனக்கும் இருக்கிறாள். ஆனால் நான் அவளைப் பார்க்க முடியாது. அவளுடன் சேர்ந்து இருக்க முடியாது. ஐயோ! என்று புரண்டுகொண்டிருந்தேன்.

நாடகம் முடிந்தபின் வீட்டுக்குப் போகும் பொழுதாவது அவளுக்குத் தயை வந்து என்னைக் கண்டுபிடித்து ஒரு வேளை அழைத்துக் கொண்டு போகலாமோ? என்றும் வீண்



''...அன்றிரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை. வரும் என்றே தோன்றவில்லை. கண்ணீர் சிந்திக்கொண்டு பித்தனைப்போல் நகரத்தில் தெருவெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தேன்...''

ஆசை ஒன்று இருந்தது. இரவு மூன்று மணி வரை யில் தலை வாசலில் காத்து நின்றிருந்தேன். ஆனால், அவள் என் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கணவனுடைய கையோடு கை கோத்துக்கொண்டு சிரித்த வண்ணம் வந்தவள், தயாராக நின்றிருந்த காரில் ஏறிப்போய் விட்டாள்.

அன்றிரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை. வரும் என்றே தோன்றவில்லை. கண்ணீர்சிந்திக்கொண்டு பித்தனைப் போல் நகரத்தில் தெருவெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தேன். அலைந்து அலைந்து கால்கடுத்த பின் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ஒரு மூலையில் படுத்துக் கொண்டேன்.

இன்றும் அந்தப் பைத்தியம் என்னை விடவில்லை. நடு வயதுப் பெண் ஸ்திரீகளைக் கண்ட போதெல்லாம் அவர்களுள் ஒருத்தி என் அம்மாவாக இருக்கலாமோ என்று புலம்பிக் கொண் டிருப்பேன். எனக்குத் தாய் இருந்தும் இல்லாதது போல்தான். அவளை நினைத்து அழுவதால் பலன் இல்லை. அவளும் என்னைப் பார்ப்பது சாத்தியம் இல்லை. என்னைக் கண்டாலும் தன் மகனென்று அவளால் கண்டு பிடிக்க முடியாது. நான் இதுவரையில் கண்ட பெண்களில் என்னைப் பெற்றவளும் இருந்திருக்கலாமோ என்ன வோ? ஆனால் அவள் இவள் தான் என்று எப்படி அறிய முடியும்?

தெரிந்ததா? இந்த உலகத்தில் எனக்கு யாரும் இல்லை. என் பெயர் என்ன என்பதும் எனக்குத் தெரியாது. ஜனங்கள் என்னைக்கூப்பிட விரும்பினால் ''ஏ பூட் பாலிஷ்'' என்றே கூப்பிடுவார்கள். அந்தப் பெயரே எனக்கும் பழக்கமாகி விட்டது. பிறவியிலேயே பரதேசியாகப் பிறந்தவனுக்கு என்ன பெயராக இருந்தால் என்ன? தாய் இருந்தும் இல்லாததுபோல், தந்தை யார் என்பதும் தெரியவில்லை. எல்லோரும் இருக்கலாம். ஆனால், இந்தப் பலவிதமான உலகத்தில் நான் மட்டும் பரதேசி! என்னைப் பெற்ற தந்தை இந்த உலகத்தில் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த உலகத்தில் என்னைப் பெற்ற தாயும் அதை ஒப்புக் கொள்ள முடியாது. நான், என்னைப் போன்ற பரதேசிகள் எங்கள் வாழ்வு விசித்திரமான வாழ்வு. நாய்களின் பிழைப்பு பரவாயில்லை. எங்கள் வாழ்வு யாருக்கும் வேண்டாம். நாய்க் குட்டிகள் கூடத் தம் பெற்றோருடன் சேர்ந்திருக்கும். எங்களுக்கு அந்த அதிருஷ்டமும் இல்லை. இந்தத் தண்டனைக்கு நாங்கள் என்ன பாவம் செய்தோம்? நாங்கள் வாழ்வது தான் எதற்காக? ஆனாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்வதற்கு இந்தப் பூட் பாலிஷ் இருக்கவே இருக்கிறது. அதே தான் என்னுடைய சொத்தெல்லாம். அதை விட்டால் எனக்கு வேறு கதி இல்லை. எந்த ஆசையும் இல்லை.

''பாலிஷ் – ஒரே அணா சார். அதிகம் இல்லை. பாலிஷ்! பூட் பாலிஷ்!''

**– சாகித்திய அக்காடமியின் 'கன்னடச் சிறுகதைகள்' என்ற தொகுப்பிலிருந்து..**

**தமிழாக்கம் : எஸ்.கே. சீதாதேவி**
**நன்றி : பாரி நிலையம் சென்னை -1.**

ஒருவனது அழகு அவனுடைய உடலமைப்பில் இல்லை; அவனது குண நலனைப் பொறுத்தே அமையும்.

**– காந்தியடிகள்**




**சமய நெறியும் மனித வாழ்க்கையும்**

ஆசிரியர் : தி. சேஷாத்திரி
பக்கம் : 40 விலை ரூ. 50.00

மனித வாழ்க்கையானது சமய நெறியுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது என்று இதில் விளக்கியிருக்கிறார், நூலாசிரியர்.

**காந்திவழிக் கதைகள்**

ஆசிரியர் : மா.பா. குருசாமி
பக்கம் : 59 விலை ரூ. 6.00

காந்தியக் கருத்துகளை மையமாகக் கொண்ட 9 சிறுகதைகள் இப்புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன.

**அகிம்சை**

ஆசிரியர் : அப்துல் ரசாக்
பக்கம் : 156 விலை ரூ. 16.00

அகிம்சைபற்றி ஆங்கிலத்தில் நிறைய நூல்கள் இருக்கின்றன; அவற்றுக்கீடாக 11 கட்டுரை களோடு இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

**இரத்த அழுத்தத்திற்கு இயற்கை மருத்துவம்**

ஆசிரியர் : தர்மசந்த சராவகி
தமிழாக்கம் : வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி
பக்கம் : 88 விலை ரூ. 10.00

அண்மைக்காலமாக நாட்டில் பரவலாக அதிகரித்துவருகிறது இரத்த அழுத்த நோய். அதை இயற்கை மருந்துவத்தின் மூலமே குணப்படுத்திவிட முடியும் என விளக்குகிறது இந்தப் புத்தகம்.

– மேற்கண்ட 4 நூல்களையும் வெளியிட்டோர்:
காந்திய இலக்கியச் சங்கம் மதுரை.
கிடைக்குமிடம் : காதி கிராமோத்யோக் பவன்,
சென்னை - 600 002. மதுரை - 625 001

**தமிழர் காசு இயல்**

ஆசிரியர் : நடன. காசிநாதன்
பக்கம் : 194 விலை ரூ. 45.00

தமிழ்நாட்டில் பல்வேறு காலகட்ட அரசியல் சூழலில் வெளியிடப்பட்ட காசுகள் பற்றிய வரலாற்று நூல் இது. டாக்டர் ம.பொ.சி. அவர்களின் அறக்கட்டளைக்காக நூலாசிரியர் ஆற்றிய சொற்பொழிவின் வெளியீடு.

**இலக்கியத்தின் நோக்கமும் பயனும்**
**(தொகுதி - 2)**

பக்கம் : 336 விலை ரூ. 60.00

தலபுராணம், திருப்புகழ், தூது இலக்கியம், தேவாரம், பதினெண் கீழ்க்கணக்கு, பரணி இலக்கியம், பிள்ளைத்தமிழ், இலக்கியம், புறப்பொருள், பெருங்கதை, சீவக சிந்தாமணி, முதலிரு காப்பியங்கள் – ஆகிய தலைப்புகளின் கீழ், மாதக் கருத்தரங்குகளில் தமிழறிஞர்கள் அளித்த அரிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

– இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டோர்:
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ.
(அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113.

**காவிரி நதியின் வரலாறு**

ஆசிரியர் : பி.எல். ராஜேந்திரன் எம்.ஏ.,
பக்கம் : 280 விலை ரூ. 50.00
வெளியிட்டோர் : உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.

காவிரியைப்பற்றிப் புராணங்களில், வரலாறுகளில், சரித்திரத்தில் என்னவெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்று மட்டுமல்ல; காவிரி நதிநீர்ப் பிரச்சினை என்று - எப்படி - ஏன் தொடங்கியது? அதன் தற்போதைய நிலை என்ன என்பதையும் தெளிவாக விளக்குகிறது இந்த நூல்.

**– இந்திரன்**

# இன்று புதிதாய்ப் பிறந்தோம்....




**ஆ**த்மாக்களே!
இனியும்,
புறாக்களின் சிறகுகளில்
வேண்டாம் துப்பாக்கி ரவைகள்.

மனிதர்களே!
அவதாரங்களின் பெயரால்,
தேசியக் கால்வாய்களில்
வேண்டாம் நர பலிகள்.

தோழர்களே!
இரங்கற்பாகூட எழுதாமல்
மதங்களுக்குப்
புதைகுழி வெட்டுங்கள்.
நாமெல்லாம் மனிதர்கள்;
புதிதாய்ப் பிறந்த மனிதர்கள்!
ஆம்!
நாம் சராசரிகள் இல்லை!

**– மா. விஜயகுமார்,**
மதுரை - 9

**பா**ரத விடுதலை நாளின் நினைவு
பற்றிடும் போதினிலே – ஒரு
வீரமும் எழுச்சியும் வெற்றியும் மகிழ்ச்சியும்
வீறுது நெஞ்சினிலே! - நாம்

தீரர் பரம்பரை வழியினர் என்னும்
தெம்பு பிறக்கிறது - புகழ்
ஆரம் அணிந்தவர்க்கு அஞ்சலி செலுத்திட
ஆவல் சிறக்கிறது!

புயலென இடியெனக் கடலென முழங்கிய
பூட்கைகொள் மறவர்களை - இங்கு

**(பாராட்டுக்குரிய பாடல்கள்)**

அயலவன் கண்டு பயந்து நடுங்கி
அகன்றனன் விரைவினிலே - அவன்

இயற்றிய பாதகக் கொடுமைகள் கொலைகள்
எண்ணி முடியாதே! - நம்
உயிரை உரமாய்ப் போட்டுக் கண்ட நல்ல
விடுதலை நாளிதுவே!

**கொடுமுடி கவிஞர் க.அ. பிரகாசம்.**

**நா**ற்புறத்துச் சுவர்வேலி நம்மவரை ஒன்றாக்கித்
துப்பாக்கிச் சாம்பல் உதிர்த்துக்
காற்றோடு கலந்துவிடச் சாலியன்வா
லாபாக்கில்
சுதந்திரமாம் வீர வுணர்வைச்
சொல்லிடவே உயிர்வேள்வித் தியாகத்தில்
துள்ளிட்ட
பகத்சிங்காம் வீர மகன்போல்
தென்னாட்டி வாஞ்சியெனத் திலகனெனும்
வ.உ.சி.
தியாகத்தின் குருதி மலர்கள்
வெந்து தணியாத வீரவரிக் கவியாத்த
செந்தணலாம் பாரதியே போல்
பாட்டுத் திறத்தாலே கவித்தேரை இழுத்திட்ட
பட்டுக்கோட்டை யார் திறம்போல்
நாட்டும் நாவன்மை சொற்களிலே நளினவரி
ப.ஜீவா கொள்கைத் திறம்போல்
இங்கே மீட்டுத்தரவே இன்று புதிதாய்ப்
பிறந்தோம்
இறவாப்புகழோடு மலர்ந்தோம்!

**– இளசைஅருணா**





''என்றுபுதிதாய்ப் பிறந்தோம்?'
என்றே எண்ணி
என்னுள்ளே நான்நினைத்தேன்...
இனிய அன்னை
வயிற்றிலிருந்து வந்தோமே
அந்த நாளா?
வரிவரியாய் எழுத்தெண்ணிக்
கற்ற நாளா?
கண்வழியாய் உள்புகுந்த
காதல் நாளா?
கனதனமாம் பெருஞ்செல்வம்
சேர்த்த நாளா?
எந்நாளில் நாம்புதிதாய்ப்
பிறந்தோம்? ஆ! ஆ...!
எந்நாளாம்... எந்நாளாம்!
எந்த நாளாம்?

– அமுதபாரதி

அன்று முதல் இன்று வரையிலும்
இடிபட்ட வாழ்க்கை - காரணம்
மனிதனில் மதம், ஜாதியெனும்
இடர்ப்பாடுகள்!
மதமெனும் துப்பாக்கியிலிருந்து வெளிவரும்
கலவரமெனும் குண்டுகள்
இம்மண்ணில் எத்துணை உயிர்களை
மண்ணோடு மண்ணாக்கியிருக்கும்!
முதல் நாள் சமைத்ததை மறுநாள்
உண்ண மறுக்கும் நாம்
மதம் என்னும் பழமையான எண்ணத்திலிருந்து
மாறுவது எப்போது?
மனித இனம் உயர்ந்து நிற்கும்



இந்தக் காலத்தில்
அவனியில் பிளவுகள் எதற்கு?
பிறந்த குழந்தையின் எண்ணத்தைப்போல்
நாமும் ''இன்று புதிதாய்ப் பிறந்தோம்''
என்றெண்ணுவோம்.

– கலைவாணி

சாதித்தீக் குழம்புகளால்
சலசலக்கும் எரிமலைகள்

மதங்களின் விலங்குகளால்
மாலையிட்ட மனங்கள்

தீயின்றி நோயின்றி
தீய்க்கின்ற தீண்டாமை..

நெல்விதைக்கப் புல் முளைக்கும்
நிலைகெட்ட கல்விப்புண்

ஊமைக் காயத்தால்
உருகிவிட்ட இலக்கியங்கள்...

ஊமையாய்க் குருடாய் செவிடாய்
உலகில் சிலநாள் திரிந்தபின்

இன்று புதிதாய்ப் பிறந்தோம்
என்று விழித்துப் பார்த்தான்;

நேற்றைய வாழ்வின் மிச்சத்தில்
நாற்ற மெடுத்த நாடு!

அதை மாற்ற முயலுவோம்
முறையோடு!

பா. திருநாவுக்கரசு

# வாதநோயும் சித்த மருத்துவமும்

டாக்டர் பி. பாலசுப்பிரமணியம்

வாத நோய் கண்டு அவதிப்படும் பலரை நீங்கள் பாத்திருப்பீர்கள். அவர்கள் படும் அவதி, சொல்லி முடியாதது ஆகும். இந்த நோய்க்கு அலோபதி மருத்துவமே நல்லது என்பார்கள் சிலர்; அது சரியல்ல. வாதநோய்க்கு ஏற்ற சிகிச்சை முறை மிகப் பழங்காலத்திலேயே நம் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறது. அதற்குச் சான்றான ஓலைச்சுவடிகள் பல இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வாத நோயை வளி நோய் என்றும் கூறுவார்கள். இதற்கு வளிக்குற்றம், தன்னுடைய அளவில் மிகுந்து - குத்தல், குடைதல், நோதல், தொழில் அற்றுப்போதல் முதலியவைகளை உண்டாக்கிப் பல வகைப்பட்ட வாத நோய்களைப் பிறப்பிக்கும் குணம் இயல்பாக உண்டு.

## முன்குறி குணங்கள்

வாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடலில் நோதல், குத்தல், பிளத்தல் போற்காணல் நரம்பு முதலியன குன்றல், நடுக்கல், இறுக்கமாதல், நீர்ப் பசையின்மை, தசை, நரம்பு அசைதல், இளைத்தல், குடைதல், அடிபட்டது போன்று வலித்தல், தளர்ச்சி, மரத்துப்போகுதல், சிறுநீரும் எருவும் (ஆசனவாய்) கட்டுப்படுதல், நீர்வேட்கை, எலும்புக்குள் குடைதல், நீட்டவும் முடக்கவும் அசைக்கவும் முடியாதிருத்தல் ஆகியவை வாத நோய்க்குறி குணங்கள் ஆகும்.

## நோய் விவரம் :

ஒவ்வொரு மருத்துவரும் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ப வாதநோயின் வகை எண்பது எனவும், எண்பத்துநான்கு எனவும் கூறுவர். யூகிமுனி நூலில், எண்பது வகை வாதநோய் எனக்கூறப்பட்டு உள்ளது. அதிலும் குறிப்பிடத்தக்கவை 65 ஆகும்.

யூகிமுனி தம் நூலில் வலி நோயை வகுத்த முறையைப் பின்வருமாறு கூறலாம்:

1. வாதஸ்தம்பம் 2. வாதகர்ஷணம் 3. கரஸ்தம்பம் 4. தலஸ்தம்பம் 5. பூசுவாதம் 6. காளாஞ்சகவாதம் 7. ஊருஸ்தம்பவாதம் 8. வாதகர்ணம் 9. குரிஷுகிரிஷ்வாதம் 10. நரித்தலைவாதம் 11. கும்பவாதம் 12. மலைத்த கம்பவாதம் 13. கூனிவாதம் 14. ஆகுனிவாதம் 15. அகேஷபவாதம் 16. வாதஉபகதம்



17. நெற்றிசூலைவாதம் 18. கர்ணகுலைவாதம் 19. செலிபடுவாதம் 20. பக்கவாதம் 21. பக்ஷவாதம் 22. பேய்வாதம் 23. பிராயணாலயவாதம் 24. கீழ்வாயு (சந்து வாதம்) 25. சகவவாதம் 26. அற்புதவாதம் 27. உரகாரிவாதம் 28. அஸ்வதம்பவாதம் 29. நேத்திர பவுத்திர வாதம் 30. மகாவாதம் 31. தண்டகவாதம் 32. அஷ்டதற்திர வாதம் 33. வசனாவாதம் 34. மிருத்வவாதம் 35. உதர வாதம் 36. மூத்திர உதரவாதம் 37. அக்கில வாதம் 38. சவ்விரங்க வாதம் 39. ஊர்த்து வவாதம் 40. அஞ்ஞானத் தம்பம் 41. சிரக்கம்ப வாதம் 42. வச்சிரரூபவாதம் 43. கண்டகிராக வாதம் 44. யோனி சூலைவாதம் 45. கர்ப்பசூலை வாதம் 46. அஷ்டசூலை வாதம்

**அன்பை விலைகொடுத்து வாங்க முடியாது; உண்மை அன்பைப் பெறத் தியாகம் செய்தாக வேண்டும்.**

**– டாக்டர் எம்.ஜி.ஆர்.**

47. தந்தவாயு 48. வாதசுரோஷிதம் 49. குடல் வாதம் 50. உதரவாத சுரோணிதம் 51. வாதகர்ண சூலை 52. பித்தகண்ண சூலை 53. கபகர்ணசூலை 54. உதிரவாத சுரோணிதம் 55. மூடுவாதம் 56. வசுவாதம் 57. வாதத்தலைநோக்காடு 58. பித்ததலை நோக்காடு 59. சன்னிவாத நோக்காடு 60. ஒருதலையின் வர்த்தம் 61. சூரியவர்த்தம்நோக்காடு 62. சந்திரவர்த்த நோக்காடு 63. கானவாத சூலை 64. இரத்தபித்த நோக்காடு 65. கிருமி கர்ணசூலை.

இப்படி வாதநோய்களைக் கூறி விட முடியுமே தவிர, இப்போதைக்கு அவைபற்றி விளக்கம் அளிக்க காலநேரம் போதாது; ஆகவே முக்கியமான சிலவற்றின் குறி குணங்களைக்கூறி உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

### காளாஞ்சகவாத குறிகள்

இந்நோயில் கை, கால், தொடை, மூட்டு இவைகளில் பிடிப்பது போன்றும், முறுக்குவது போலவும், குடைதல் போலவும் நொந்து நடக்க முடியாத நிலை உண்டாகும். உடல் மெலிந்து மூட்டுகள் தோறும் முடங்கி கரடு கட்டிக் கொள்ளும். உடல் மிகவும் வெளுத்துத் தினவெடுத்து சொரி, சிரங்கு உண்டாகும், பசி இருக்காது.

### ஊர்த்தம்ப வாதம்:

இந்நோயில் வலியானது தன் அளவில் குறைந்து அடித்தொடைகள் இரண்டையும் பற்றி, கை, கால், விரல்களைச் சுற்றி கனத்து சாணியைப்பூசியது போல உணர்ச்சி உண்டாக்கி, தலை பாரமாக இருத்தல், உடல் வீங்கித் திமிர் உண்டாகி நடக்க முடியாத வண்ணம் செய்யும்.

### நரித்தலைவாத குறிகள்:

இந்நோயில் முழங்கால் மூட்டில் செந்நீர் நிரம்பி சிவந்து வீங்கி நீட்டவும், நிற்கவும், முடியாமல் நரியின் தலையைப் போல் மிகுதியாய் வீங்கிக் காணப்படும். நாடித் துடிப்பும் அதிகரிக்கும். வலி இருக்கும், பசி எடுக்காது.

### நெற்றி சூலைவாதம்

வாதப் பிணியால் இருபுருவங்களின் இடையில் குடைதல், மூக்குத் தண்டு, குரல்வளையில் வலி, குடைதல் முதலியன தோன்றும், கை, கால், உடல் முழுவதிலும் கடுப்பை உண்டாக்கும். தூக்கத்தையும், மயக்கத்தையும் பெருக்கி தலையில் குத்தலை உண்டுபண்ணும்.

### பக்கவாதம்

பக்கவாதப் பிணியால் உடல் முற்றும் வாயு மிகுந்து பரவி, நாடி மெலிந்து அசைவற்று உடலைத் தாங்க முடியாத வலி உண்டாக்கி பக்கத்தில் இசிவு (வலி உண்டாகும்), கை, கால், கோணுதல், உடல் வெளுத்தல், வியர்த்தல் என்னும் குறி குணங்கள் இந்நோயில் காணப்படும்.



### சிகிச்சை முறை மருத்துவம்

1. கழிச்சல் உண்டாக்கக் கோடசூரி மாத்திரை3, சஞ்சீவி மாத்திரை2, அஷ்டபைரவம் 3 முதல் 4 மாத்திரை, மேகநாதகுளிகை மாத்திரை 2. நோயின் தன்மை உடல் வலிமை தெரிந்து மருத்துவரின் ஆலோசனைப்படி தரப்பட வேண்டும்.

2. சுழற்சி எண்ணெய்:

வாதநாச எண்ணெய், வாதகேசரி தைலம் (வெளி உபயோகத்திற்கு மட்டும்)

3. அகத்தியர் குழம்பு 1 முதல் 2 குன்றி அளவு தகுந்த அனுபானத்துடன் கொடுக்க வேண்டும்.

### 2. சிகிச்சை முறை இரண்டு : உள் மருத்துகள்

1. அயவீரச்செந்தூரம் 1 முதல் 2 குன்றி அளவு

2. ஆறுமுகச்செந்தூரம் 1 முதல் 2 குன்றி அளவு

3. சிலாசத்து பற்பம் 2 முதல் 4 குன்றி அளவு

4. சண்டமாருதம் செந்தூரம் 1 முதல் 2 குன்றி அளவு

5. வெள்ளி பற்பம் 1 முதல் 2 குன்றி அளவு

மேலே குறிப்பிட்ட மருந்துகளைத் திரிகடுகு சூரணம் அல்லது அமுக்கரா சூர்ணம் 200 மி. கிராம் அளவுடன் கலந்து கொடுக்கலாம். அனுபானமாகத் தேன், நெய், வெண்ணெய் சேர்த்துத் தர வேண்டும்.

நோயுடன் சுரம் உள்ள பொழுது வசந்தகுசுமகரம் அல்லது பிரமமானந்த மாத்திரை கலந்து கொடுக்க வேண்டும்.

### மேல்பூச்சு எண்ணெய் :

வாதகேசரி தைலம், எட்டிக்கொட்டை எண்ணெய், உளுந்துதைலம், நாராயணத்தைலம் பூச வேண்டும். எதைச் செய்வதானாலும் சரி; மருத்துவர் ஆலோசனைப்படி தான் கேட்டுச் செய்ய வேண்டும்; இது மிகவும் அவசியம்.

**சோறு மனிதனுடைய முதல் பசி; காதல், மனிதனுடைய இரண்டாம் பசி**

**– வி.ச. காண்டேகர்**

## கை மருந்துகள்

* பஸ்ஸில் பயணம் செய்யும்போது ஏற்படும் வாந்தி நிற்கக் கூந்தலை அவிழ்த்து முகர்ந்து கொண்டு வந்தால் வாந்தி வராது.

* வயிற்றில் உள்ள கீரைப்பூச்சியைப் போக்கத் தேங்காய்ப் பாலெடுத்துக் காலையில் வெறும் வயிற்றில் குடித்து விட வேண்டும். சில மணிநேரத்தில் இரண்டு அல்லது மூன்றுமுறை வயிற்றால் போகும். அத்துடன் கீரைப்பூச்சிகள் அவ்வளவும் வெளியேறிவிடும்.

* நார்த்தங்காய்த் தோலை உரிந்து வைத்துக் கொண்டு வலது பக்கத்தில் தலைவலித்தால், இடது காதிலும், இடது பக்கத்தில் வலித்தால் வலது காதிலும் சிறிது சாறு பிழிந்தால் ஒற்றைத் தலைவலி மறையும்.

* கால் வீக்கம் குறையச் செம்மண்ணைத் தண்ணீரில் கரைத்து அடுப்பில் சுடவைத்தால் கெட்டியாகச் சூடாக இருக்கும். இந்த மண்ணைக் கை பொறுக்கும் பக்குவச் சூட்டுடன் காலில் தடவவேண்டும். இதனை இரவில் செய்ய வேண்டும். காலையில் கால் வீக்கம் வற்றிவிடும். யானைக்கால் வியாதிக்கு இது உதவாது. காலில் போடக்கூடாது.

* துளசிச் சாறு எடுத்து அதை இரவில் தடவி மறுநாள் முகம் கழுவினால் முகப்பரு குணமாகும்.

* சாதிக்காயைச் சந்தனக்கல்லில் உறைத்து இரவில் தினமும் முகத்தில் பூசி வந்தால் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போகும்.

– 'துணுக்கு மலர்கள்'

டாக்டர். ந.க. மங்களமுருகேசன்



# தோட்டக்கலை வளர்க்கும் தர்மபுரி

**த**ர்மபுரிமாவட்டம் என்றாலே ''மாங்கனி'' தான் நினைவிற்கு வரும். இம்மாவட்டத்தில் நிலவும் உலர் வெப்பநிலையும், கிடைக்கும் மழையளவும், நிலத்தின் தன்மையும் ''மா'' சாகுபடி செய்ய மிகவும் ஏற்றதாக உள்ளது. இம் மாவட்டத்தில் சராசரி மழையளவு 850 மி.மீட்டர். கிடைக்கும் மழையினைப் பயன்படுத்தி நல்ல வருவாய் கிடைக்கவும், சுற்றுப்புறச் சூழல் நன்கு அமையவும் ஏற்ற பணப்பயிராக விளங்குவது ''மா'' மட்டுமே.

ஆண்டொன்றுக்கு சுமார் 2000 எக்டர் பரப்பளவில் மாச்சாகுபடி அதிகரித்துக் கொண்டே வருகிறது. மாச் சாகுபடி பரப்பளவில் 42 சதவிகித பரப்பளவிற்கு மேல் தர்மபுரி மாவட்டத்திலேயே உள்ளது. மாம்பழ உற்பத்தியினைக் கணக்கில் கொண்டால் தமிழ் நாட்டின் உற்பத்தியில் 50 சதவிகிதம் தர்மபுரி மாவட்டத்திலேயே தான் விளைகிறது.

''மா'' வில் - நீலம், பெங்களூரா, மல்கோவா, அல்போன்சா, செந்தூரா, தோதத், ஹிமாயுதீன், பாதிரி போன்றவை பயிரிடப்படும் முக்கிய ரகங்களாகும். பெங்களூரா மற்றும் அல் போன்சா இரகங்கள் 60 சதவிகித பரப்பில் உள்ளது. இவ்விரு ரகங்களும் பழம் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு மிகவும் ஏற்ற ரகங்களாகும்.

மாம்பழங்கள் ஏப்ரல், மே, ஜுன், ஜுலை மாதங்களில் முறையே 10 சதம், 48 சதம், 22 சதம், 10 சதம் பழங்கள் அறுவடைக்குத் தயாராகின்றது.

உற்பத்தி செய்யப்படும் பழங்களில் 28 சதவிகிதம் தர்மபுரி மாவட்டத்திலேயே உண்பதற்காகவும், 10 சதவிகிதம் மாம்பழக்கூழ் தயாரிப்பதற்காகவும், 41 சதவிகிதப்பழங்கள் அண்டை மாவட்டங்களுக்கும், 21 சதவிகிதம் அண்டை மாநிலங்களுக்கும் கணிசமான அளவு அல்போன்சா, பங்கனப்பள்ளி போன்ற ரகங்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

### பழம் பதனிடும் தொழிற்சாலைகள்

1. அமிர்தம் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் – பையூர்
2. தேவராஜ் பழம் பதனிடும் தொழிற்சாலை - கிருஷ்ணகிரி
3. நெக்டார் பழரசத் தொழிற்சாலை - பாகலூர், ஒசூர்
4. டிராப்பிக்கான் பழரசத் தொழிற்சாலை - சிப்காட், ஒசூர்
5. கன்வில் பழரசத் தொழிற்சாலை - தளிநெடுஞ்சாலை, ஒசூர்
6. ஸ்டார் பழரசத் தொழிற்சாலை - தேன்கனிக்கோட்டை
7. டேஸ்ட் பழரசத் தொழிற்சாலை - ஓசூர்

தொழிற்சாலைகள் தவிர 20க்கும் மேற்பட்ட



## மாணவர்கள்

உழவன், வயலில் விளைந்த நெல்லை சாப்பாட்டிற்கென்று தனியாகவும், விதைக்கென்று தனியாகவும் பிரித்துவைத்துக் கொள்கிறான். சாப்பாட்டிற்கு எடுத்துவைத்த நெல் தீர்ந்துவிட்டால், எக் கஷ்டம் அடைந்தாவது கடையில் காசுகொடுத்தாவது அரிசி வாங்கி உண்பானேயொழிய விதை நெல்லைத் தொடுவதற்கு ஒருநாளும் அவனுக்கு மனம்வராது. ஆகையால், அரசியல் உழவனாகிய நான் விதை நெல்லாகிய மாணவ முத்துக்களை அரசியலுக்கு ஒரு நாளும் இழுக்கமாட்டேன்.

– அறிஞர் அண்ணா

– 1969ல் பச்சையப்பன் கல்லூரி விழாவில் பேசியதிலிருந்து.

குடிசைத்தொழிற்சாலைகளும், ஊறுகாய்தயாரிக்கும் நிலையங்களும் உள்ளன.

மாங்கனிக்கு அடுத்ததாக சப்போட்டா, மாதுளை, கொய்யா போன்ற பழவகைகள் பயிரிடப் படுகின்றன.

இம்மாவட்டத்தின் சாகுபடியில் 1606 எக்டர் பரப்பில் 5780 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப் படுகிறது. இம்மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட உரிகம் புளி சாகுபடி பரப்பளவு, ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வரு கிறது. புளியின் பழம் பதனிடும் நிலையம் (பிரதர்ஸ் கோல்ட் ஸ்டோரேஜ்) கிருஷ்ண கிரியில் உள்ளது. தர்மபுரி பகுதியிலும் புளிகள் பதப்படுத்தும் நிலையம் உள்ளது.

இம்மாவட்டத்தில் 13,461 எக்டேர் பரப் பளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அரூர் வட்டாரத்தில் 11,645 எக்டேரிலும் பாலக்கோடு வட்டாரத்தில் 1196 எக்டேரிலும் பென்னகரத்தில் 163 எக்டேரிலும், கிருஷ்ணகிரி 157 எக்டேர் மற்றும் ஊத்தங் கரையில் 108 எக்டேரிலும் சாகுபடி செய்யப் பட்டுவருகிறது. சுமார் 2001 இலட்சம் மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கிறது.

மரவள்ளிக் கிழங்கிலிருந்து சிப்ஸ், கிழங்கு மாவு, கிழங்கு ரவை, ஜவ்வரிசி போன்றவை தயாரிக்கப் படுகிறது. இங்கு 42 சேகோ பேக்டரிகள் அரூர் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ளன.

கெர்க்கின்ஸ் என்ற வெள்ளரிக்காய் ரகமும் இம்மாவட்டத்தில் சுமார் 300 எக்டேரில் பயிரிடப்பட்டுவருகிறது. கெர்க்கின்ஸ் அறு வடை செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. கெர்க்கின்ஸ் பதப்படுத்தும் தொழிற்சாலை (மேக்ஸ் ஓர்த் அன்ச்சாட்) ஓசூர் பகுதியில் உள்ளது.

மலர் சாகுபடியினைப் பொறுத்தவரை ரோஜா, மல்லிகை, சாமந்தி, நிலச்சம்பங்கி, கனகாம்பரம் போன்ற மலர்ப்பயிர்கள் சுமார் 677 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ரோஜா மலர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. ஓசூர் பகுதியில் உள்ள தட்பவெப்ப நிலையால் பசுமை இல்லங் களில் ரோஜா மலர்கள் வளர்க்கப்-பட்டு வெளி நாடுகளுக்குக்கீழ்க்கண்ட நிறுவனங்கள் அனுப்பி வருகின்றன.

1. மஞ்சுஸ்ரீ ப்ளான்டேஷன் லிமிடெட் ஓசூர்

2. சுவர்ணா ஃப்ளோரிக் லிமிடெட் பாகலூர் ஓசூர்

ஹாரிசன் மலையாளம் பிளேன்டேஷன் லிமிடெட், ஓசூர் போன்றவைகளாகும். தற்போது 15க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ரோஜா மலர் ஏற்றுமதி செய்யத் தயார்நிலையில் உள்ளன.

ஓசூர் பகுதியானது மலைப்பகுதிகள் உள்ள தட்பவெப்ப நிலைகள் போன்று உள்ளதாலும், மண் வளமுடையதாக உள்ளதாலும் இங்கு சமவெளிப் பகுதிகளில் உள்ள மா, கொய்யா, மாதுளை, சப்போட்டா போன்ற பழப்பயிர்கள் தவிர உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, காரட், பீட்ரூட், தக்காளி போன்ற பயிர்களும் நன்கு விளைகின்றன. தக்காளியில் வீரிய ரகங்கள் சுமார் 1200 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப் பட்டுவருகிறது.

விதைகள் மற்றும் வீரிய ரகங்கள் மூலம் உற்பத்தியினைப் பெருக்குவதுடன் ''திசு வளர்ப்பு'' முறையின் மூலம் வாழை, அழகு தாவரங்கள் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகின்றனர். ''திசு வளர்ப்பு'' முறை யினை ஹாரீசன் மலையாளம் பிளான் டேஷன் லிமிடெட் கம்பெனியின் சிறந்த முறையில் 'திசு வளர்ப்பு' மூலம் செடிகள் உற்பத்தி செய்கின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் நிலவுகின்ற தட்ப வெப்ப நிலை மற்றும் மண்ணின்தன்மைக்கேற்பசமவெளிப் பகுதிகளில் விளையும் பயிர்கள் தவிர மலைப் பிரதேசப் பயிர்களும் பயிரிடப் படுவது மட்டுமின்றி அனைத்துத் தோட்டக் கலைப்பயிர்களும் இம் மாவட்டத்தில் விளை கின்றதால் ''இம்மாவட்டத் தினைத்'' தோட்டக் கலை மாவட்டம் என்றே அழைக்கலாம்.

இம்மாவட்டத்தில் அகில இந்திய மாங்கனி கண்காட்சி 1992 ஆம் ஆண்டு முதற்கொண்டே தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் ''மா'' பரப்பு ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

# வேலை வாய்ப்புகள்

பேராசிரியர் முனைவர் கா.மு. பாதுசா

மக்கட்தொகை பெருகி வரும் வளரும் நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் விரைந்தும், தொடர்ந்தும் உருவாக்கப்பட வேண்டும். மனித ஆற்றல், முறையாக வளர்க்கப்பட வேண்டும். அதற்குத் தக்க வகையில் கல்வித் துறையில் திறன்களை வளர்க்கும் கல்வி முறையினை உருவாக்க வேண்டும். மனித ஆற்றல் திட்டமிடும் பணி முறையாகவும், தொடர்ந்தும் செயல் படுத்தப்பட வேண்டும். அப்போது தான் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும், இன்றைய தினம் நமது நாட்டில் பல்வேறு துறைகளில் கல்விக்கூடங்கள் அதிகரித்து வந்த போதிலும் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை நாம் இன்னும் அடைய முடியவில்லை. அத்துடன் பல்வேறு நிலைகளில் கல்வியினைப் பெறுகின்றவர்கள் திறன்களை வளர்த்துக்கொண்ட போதிலும், இன்னும் முழுமையாக வேலை வாய்ப்பினைப் பெற முடியவில்லை.

பேராசிரியர் முனைவர் கா. மு. பாதுசா, கிரசெண்ட ஆட்சிப்பணி பயிற்சி மைய இயக்குனர் உயர் கல்வித்துறையில் விரிவுரையாளர், பேராசிரியர், துறைத்தலைவர், முதல்வர் என்று தொடர்ந்து 30 ஆண்டுகாலமாகப் பணியாற்றி வருகிறார். பல்வேறு அரசுப் பணிகளுக்கான வேலை வாய்ப்புகளைப் பற்றி, இந்தக் கட்டுரையில் தெளிவுபட விளக்குகிறார். தமிழக அரசின் விருதினையும் சீதக்காதி அப்பா நினைவு இலக்கிய விருதினையும் பெற்றவர் இவர். சென்னை கிறித்துவக்கல்லூரியில் பயின்று புதுக்கல்லூரியில் பணியாற்றி பின்னர் இளையாங்குடி டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரியின் முதல்வராகவும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் தொலைக்கல்வி இயக்க இயக்குநராகவும் பணியாற்றியவர். மாணவர்களுக்குப் படிப்புத்துறைகள் வேலைவாய்ப்புகள் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக இவ்வாறு பொதுநல நோக்குடன் வழங்கி வருகின்ற நெறியாளர்.

எனவே, மனித ஆற்றல் திட்டமிடல் (Man Power Planning) செம்மையாக இல்லை என்று கூறலாம். படித்தவர்களிடையே கூட வேலை வாய்ப்பினைப் பல்வேறு விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்க வல்ல சூழலையும் நாம் அறிவோம். எனவே, வேலை வாய்ப்புக்களை இனங்கண்டு அதற்குரிய திறன்களை வளர்க்கத் தக்க வகையில் இளைஞர்கள் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் வாழ்வு வளம் பெறும். நாடும் வளர்ச்சி பெறும்.

### தேர்வாணையங்களின் பணி

இந்திய நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வேலை வாய்ப் பினைத் தொடர்ந்து பெருக்கி வருகிறது. குறிப்பாக, அரசுத் துறைகளில் ரெயில்வே, மற்றும் பொது நிறுவனங்கள் வேலை வாய்ப்பினை உருவாக்கி வருகின்றன. வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றன மண்டலவாரியாக வேலை வாய்ப்பினைத் தொடர்ந்து உருவாக்கிவருகின்றன. தனியார்துறையிலும் வேலை வாய்ப்புக்கள் தொடர்ந்து உருவாகி வருகின்றன. கூட்டுத் துறையிலும், வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்

> மக்களுக்குத் தேவைப்படுவது திறமையல்ல, குறிக்கோள், ஆற்றல் அல்ல, உழைக்கும் உறுதி.
> – புல்லர் · லிட்டன்

படுகின்றன. பொதுத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள் (மத்திய அரசு, மாநில அரசு) வேலை வாய்ப்பினை விளம்பரப் படுத்துகின்றன. மத்திய அரசின் பணிகளுக்கு மையத் தேர்வாணையம் (UPSC) மாநில அரசுகளின் பணிகளுக்கு மாநில அரசுத் தேர்வாணையங்களும் (SPSC) பொறுப்பேற்று, போட்டித்தேர்வுகளை முறைப்படி நடத்துகின்றன.

வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப் படுகின்றது. தனியார் நிறுவனங்களும் கூட பயிற்சியாளர்களுக்குரிய வாய்ப்பினைக் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டுமெனசட்டம் வலியுறுத்துகிறது. மைய, மாநில அரசின் துறைகள் தவிர, நாட்டின் முப்படைகளுக்கும் தேவையானவர்களை முறைப்படுத்தித் தேர்ந்தெடுக்கின்றனர்.

தனியார் நிறுவனங்களும் தங்களுக்கு வேண்டிய வேலை ஆட்களை விளம்பரப் படுத்தித் தேர்ந்தெடுக்கின்றனர். பன்னாட்டு நிறுவனங்களும் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்து நிரந்தர வேலைகளில் வைத்துக்கொள்ளுகின்றனர். எனவே, வேலை தேடும் இளைஞர்கள் திட்டமிட்டுப் படித்து, பயிற்சி பெற்று தகுதியான வேலையினைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுதெல்லாம் வேலை தேடும் இளைஞர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுதல்கள் வழங்கப் படுகின்றன. தொழிற்கல்விக் கூடங்களில் மாணவர்கள் படிக்கும் போதே திறமையான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் படுகிறது. வேலைக்கு அமர்த்துபவர்கள் தங்களுக்குத் தேவையானவர்கள் பற்றிய விவரங்களை மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழியாக வெளியிடுகின்றார்கள். வேலை வாய்ப்புப் பற்றிய கருத்தரங்குகள், அங்காடிகள் (Career Fairs) வேலை வாய்ப்புக் காட்சிகள் (Career Exhibitions) முதலியன தொடர்ந்து நடைபெறுகின்றன. மத்திய அரசு வேலை வாய்ப்புகள் பற்றிய செய்திகளை Employment News என்ற இதழ் மூலம் வழங்கி வருகின்றது.

### இளைய சமுதாயம் முன்வருக

இளைஞர்கள் வேலைவாய்ப்புச் செய்திகளைக் குறித்த காலத்தில் அறிந்து தொடர்ந்து செயல்பட வேண்டும். விண்ணப்பங்களை முறைப்படி நிறைவு செய்து கால வரையறைக்குள் குறித்த நேரத்தில் அனுப்பி நேர்முகத் தேர்விற்குச் செல்ல வேண்டும். அரசும், தனியாரும் தருகின்ற வாய்ப்புக்களை இளைய சமுதாயம் இனங்கண்டு விரைந்து பயன்படுத்த முன்வர வேண்டும். குறிப்பாக, சில குறிப்பிட்ட இனங்களுக்குத் தகுதியானவர் விண்ணப்பிக்காததால் காலியிடங்களும் உள்ளன. ஷெட்யூல்டு பிரிவினர், அகதிகள், பழங்குடியினர், மலைவாழ் மக்கள் போன்றோருக்குச் சில நிறுவனங்கள் வழங்குகின்ற வேலை வாய்ப்புகள் கூட இன்னும் சரியாகத் தெரியவில்லை. வேலை வாய்ப்பில் ஒதுக்கீடுகள் அடிக்கடி அறிவிக்கப் பட்ட போதிலும் கூட, சில குறிப்பிட்ட பணிகள் இன்னும் காலியாக உள்ளன. இந்த இடங்களை நிரப்புவதில் சட்ட சிக்கல்களும் எழுகின்றன. எனவே, வேலை வாய்ப்பினை நன்கு அறிந்திடும் வண்ணம் இளைஞர்களுக்கு அவ்வப்போது, வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும். இதோ, சில குறிப்பிட்ட துறைகளில் வேலை வாய்ப்புக்கள் பற்றிய செய்திகள் இங்கே தரப்படுகின்றன.

**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை:

50-வது சுதந்திர தினமான 15.8.96 அன்று சென்னைக் கோட்டையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்று வைக்கிறார்.

இரண்டாம் அட்டை:

சுதந்திரதின விழாவின் போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நான்காம் அட்டை:

தமிழ்நாடு திரைப்பட விருது வழங்கும் விழா

**1. மைய அரசுப் பணிகள்**



மையத்தேர்வாணையம் (U.P.S.C) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., உள்ளிட்ட இருபத்தேழுபணி களுக்கான தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்திவரு கிறது. தேர்வினை எழுதுகின் றவர் இந்தியக் குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண் டும். தேர்வு எழுதுகின்ற ஆண்டில் ஆகஸ்டு முதல் நாள் அன்று குறைந்த பட்சம் இருபத்து ஒன்று வயது நிறைந்தவராகவும் அதிக பட்சம் 28 வயது நிரம்பிய வராகவும் இருத்தல் வேண் டும். பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) அதிகபட்ச வயதுவரம்பு முப்பத்திஒன்றாக உயர்த்தப்பட்டுள்ளது. அதிக பட்ச வயது வரம்பில் குறிப்பிட்ட பலருக்குத் தளர்த்தப்பட்டது. இதுபற்றி ஆண்டுதோறும் தரப்படுகின்ற அறிக்கைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இத்தேர்வினை எழுத நான்கு முயற்சிகளில் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஆனால் அண் மையில் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (OBC) ஏழு முயற்சிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் டிசம்பர் மாத இறுதியில் தேர்வுத் திட்டம் பற்றிய அனைத்து விவரங்களும் அறிவிப்பு அறிக்கையில் இடம்பெறும். முதல் நிலைத் தேர்வு ஜூன் மாதத்தில் ஒரே நாளில் காலையிலும், மாலையிலும் நடைபெறும். ஒவ்வொரு நாளும் இரண்டு மணிநேரம் நடக்கும். வினாக்கள் (Objective) புற வய வினாக்களாகவே இருக்கும். முதல்தாள் முதல் நிலைத் தேர்வுக்கென அறிவிக்கப்பட்ட இரு பத்தி நான்கு விருப்பப் பாடங்களில் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தேர்விற்கான பாடத் திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் மையத் தேர்வாணயம் அறிவிக்கும். இத்தேர்வில் போட்டியாளர்கள் பெறும் மதிப்பெண்கள் தர நிர்ணயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படு வதில்லை. ஆனால், முதல்நிலைத் தேர்வில் தகுதி பெற்றோர் மட்டுமே முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப் படுவர். மேலும் விருப்பப் பாடங்களின் தரமும் இள நிலை பட்டப் படிப்பள விலேயே அமையும்.

இரண்டாவது பகுதி (Paper II) பொது அறிவினைச் சோதிப்பதாகும். இந்தப் பிரிவிற்கான விடைகளைச் சராசரி கல்வியறிவுள்ள மாணவர் கூட எழுத முடியும். இத்தாளுக்கான பாடத் திட்டம் தெளிவாக வரை யறுக்கப் படாவிட்டாலும், பொது அறிவியல், மனத் திட்டத்தினை அறியும் சோதனை, புள்ளியியல், இந்திய வரலாறு, நாட்டு விடுதலைப் போராட்டம், இந்திய அரசியல், பொருளியல், பூகோளம், இன்றைய நாட்டு சர்வதேச நடப்புகள் (Current affairs) பன்னாட்டு அமைப்புகள், கலை, பண்பாடு, திரைப்படம், இலக்கியம், வரைபடங்கள், அட்டவணை இன்னபிற பகுதியினின்று வினாக்கள் இடம் பெறும். இத்தாளுக்கு 180 மதிப்பெண்கள் தரப்படுகிறது.

**முதன்மைத் தேர்வு**

முதல்நிலைத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் இறுதியில் அறிவிக்கப்படும். தேர்வுத் திட்டம் பற்றிய அனைத்து விவரங்களும் அறிவிப்பு விளம்பரத்தில் இடம் பெறும்.

இத்தேர்வில் வெற்றி பெற்றோரைத் தேர்வாணையம் படிவம் அனுப்பி முதன்மைத் தேர்விற்கு அழைக்கும். அதாவது முதல்நிலைத் தேர்வு முடிவு ஆகஸ்டு மூன்றாவது வாரத்தில் அறிவிக்கப்படும். ஆண்டுதோறும் நவம்பரில் முதன்மைத் தேர்வு தொடங்கும்.

சும்மாயிருந்து துருப்பிடித்து அழிவதைவிட
உழைத்துத் தேய்ந்து அழிவது சிறந்தது.
– ரிச்சர்டு கம்பர்லேண்ட்

முதன்மைத் தேர்வில் ஒவ்வொரு தாளும் மூன்று மணி நேரம் நடக்கும். வினாக்கள் மரபு வகை கட்டுரை அமைப்பில் இருக்கும். வினாக்கள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கும். வினாத்தள்களின் தரம் பி.ஏ. ஆனர்ஸ் / முதுநிலை அளவில் இருக்கும். குறிப்பாகத் தொழில் சார் விருப்பப் பாடங்களைப் பொறியியல் - மருத்துவம் - சட்டம் - வேளாண்மை - கால்நடையியல் துறைகளில் இளநிலைப் பட்ட வகுப்பு அளவிற்கே வினாக்கள் இடம்பெறும்.

முதல்நிலைத் தேர்விற்கு அறிவிக்கப்பட்ட விருப்பப்பாடங்களோடு மானுடவியல் (Anthropology) மேலாண்மை விருப்பப் பாடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டுள்ளன. முதன்மைத் தேர்விற்காக விருப்பப் பாடங்களில் இந்திய அரசியலமைப்பில் எட்டாவது அட்டவணையிலுள்ள (23 மொழிகள்) இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, நாற்பத் தெட்டு பாடங்களுக்கும் தனியாகப் பாடத்திட்டங்கள் ஆண்டு தோறும் அறிவிக்கப் படுகின்றன.

**முதன்மைத் தேர்வு – தாள்கள்**

| தாள் | பாடம் | காலம் | மதிப் பெண்கள் |
|---|---|---|---|
| தாள்1 | அட்டவணையில் தரப்பட்டுள்ள இந்திய மொழிகளுள் ஒன்று | 3 மணி | 300 |
| தாள் 2 | ஆங்கிலம் | 3 மணி | 300 |

இவ்விரு தாள்களும் கட்டாயமானவை. ஆனால், இவ்விரு தாள்களிலும் பெறுகின்ற மதிப்பெண்கள்தகுதிதானேதவிர தரத்திற்கல்ல.

ஏனைய அனைத்துத் தாள்களும் இவ்விரு தாட்களில் தகுதி பெற்ற பின்னரே மதிப்பீடு செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| தாள் 3 | கட்டுரை (இந்திய மொழிகளுள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்) | 3 மணி | 200 |
| தாள் 4, 5 | பொது அறிவு | 3 மணி | 300 |
| தாள் 6,7 | விருப்பப் பாடம் | 3 மணி | 300 |

தாட்கள் 3 விருந்து 9 வரையுள்ள தேர்வுகள் மொத்த மதிப்பெண்கள்: 2300

நேர்முகத் தேர்விற்கு எழுத்துத் தேர்வில் தரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவர். நேர்முகத் தேர்விற்கான மதிப் பெண்கள்: 300, ஆக மொத்த மதிப்பெண்கள் 2300.

**விருப்பப் பாடங்களின் வகைகள் (Type of Optionals)**

விருப்பப் பாடங்களின் தேர்வில்தான் வெற்றியமைகிறது என்பது அறிந்ததே. போட்டியாளர்கள் தீவிர கவனம் செலுத்தி முதல்நிலைத் தேர்விற்கும், முதன்மைத் தேர்விற்கும் தேர்ந்தெடுக்க வேண்டும். மையத் தேர்வாணையம் விருப்பப் பாடங்களை ஆறு வகையாக வகுத்திருக்கிறது.

**பொறியியல் (Engineering)**

கட்டுமானப் பொறியியல்
மின் பொறியியல்
எந்திரவியல்

**மொழிகள் (Languages)**

அசாமி, வங்காளி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, மராத்தி, மலையாளம், ஒரியா, பஞ்சாபி, பாலி, பாரசீகம், சமஸ்கிருதம், சிந்தி, தமிழ், தெலுங்கு, அரபி, ஜெர்மனி, பிரெஞ்சு, ருசியம், ஆங்கிலம், சீனம்.

**அறிவியல் (Science)**

வேளாண்மை, கால்நடை வளர்ப்பும் பாதுகாப்பும், தாவரவியல், விலங்கியல், வேதியியல், பூதவியல், நிலவியல், கணிதம், புள்ளியியல்.

**கலையியல் (Humanities-A)**

மானிடவியல், வரலாறு, சட்டம், மேலாண்மையியல், பொது நிர்வாகம், தத்துவவியல், அரசியலும் அறிவியலும், பன்னாட்டு உறவு, சமூகவியல்.

**கலையியல் (Humanities-B)**

வணிகவியலும் கணக்கீடும், பொருளியல், பூகோளம், உளவியல்.

**கால அவகாசம்:**

ஏறக்குறைய முதன்மைத்தேர்வு ஒரு மாத காலம் நடைபெறும். பொது அறிவு இருதாள்

**மகத்தான பணியைத் தொடங்குகிறது அறிவு;
அதை முடிக்கிறது உழைப்பு.**
**– ஜோஸப் ஜுபேர்**

களைத் தொடர்ந்து எழுதிய பின்விருப்பப் பாடங்களுக்கான தேர்வுகளும் உடனே தொடங்கி விடுகின்றன. இதற்குப் பின்னர் தான் மொழி இலக்கியப் பாடங்களுக்கான தேர்வு நடைபெறும். இறுதியாகச் சிலரே விருப்பத் தேர்ந்தெடுக்கும் மருத்துவம் போன்ற விருப்பப் பாடங்களுக்கான தேர்வு நடைபெறும்.



விருப்பப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் சிலர் இரு விருப்பப் பாடங்களைத் தேர்வுகளுக் கிடைப்பட்ட காலத்தைக் கணக்கில் கொண்டும் தேர்ந்தெடுக்கின்றனர். கால அவகாசம் இருப்பினும் படித்த பலவற்றை மீண்டும் ஒரு முறை ஆழமாகத் திருப்பிப் பார்க்க இந்நாட்கள் பயன்படும்.

விருப்பப் பாடத்தைப் பற்றிய தீர்மானம் செய்யச் சிறிது காலதாமதமானாலும், ஒன்றைத் தீர்மானித்தபின் தொடர்ந்து உழைப்பதே வெற்றிக்கு வழி செய்யும்.

**ஐ.இ.எஸ். (I.E.S.) ஐ.எஃப்.எஸ். (I.F.S.) முதலிய தேர்வுகள்:**

மையத் தேர்வாணையம் அனைத்திந்திய பணிக்கான தேர்வுகள் மற்றும் 25-க்கும் மேற்பட்ட மைய அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் (Group A, Group B) நடத்துவதோடு -

Indian Engineering Services
Indian Economic Services
Indian Statistical Services
Indian Forest Services
Indian Geological Services
National Defence and Naval Academy Examinations
Combined Defence Services Examinations
Combined Medical Services Examinations
Departmental Competitive Examination
Special Class Railway Apprenticeship Examination

போன்றவற்றினையும் நடத்துகின்றன:

பெரும்பாலான போட்டியாளர்கள் அனைத்திந்திய அரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளை மாத்திரமே எழுதிவிட்டு ஏனைய தேர்வுகளைப் பற்றி எண்ணுவதில்லை. ஏனைய தேர்வுகளும் அவற்றினைப் போலவே, சிறப்பு வாய்ந்தவைகள். ஆனால், இத்தகைய தேர்வுகளுக்கு அவ்வப்போது மையத் தேர்வாணையம் வெளியிடுகின்ற அறிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்துப் பாடத் திட்டங்களை அறிந்து சரியான நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்று நிறைவு செய்து சரியான காலத்திற்குள் மையத் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

நேரடியாகத் துறை சார்ந்த பாடங்களிலும், பொது அறிவிலும் தேர்வு நடத்தப் பெற்றுத் தகுதிபெற்ற போட்டியாளர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு மைய அரசுப் பணியில் சேர வாய்ப்புள்ளது என்பதனை உணர வேண்டும். முதல்நிலைத் தேர்வு என்ற பொதுத் தேர்வு இதற்கு இல்லையென்பதையும் உணர்த்துவதுதான் இப்பகுதியில் தலையாய நோக்கம். கடந்த பல ஆண்டுகளின் இத் தேர்விற்கான வினாக்களையும், பாடத் திட்டங்களையும் கருத்தில் கொண்டு உடனடியாகச் செயல்பட வேண்டும்.

### Indian Economic Services

| S.No. | Subject | Parts | Type | Duration | Marks |
|---|---|---|---|---|---|
| 1. | General English | I | Objective | 3 | 100 |
| 2. | General Studies | I | Objective | 3 | 150 |
| 3. | General Economics | I&II | Short Answers & Essay | 3(1+2) | 200 |
| 4. | General Economics | II | " | 3(1+2) | 200 |
| 5. | Indian Economics | I & II | " | 3(1+2) | 200 |

II. Viva

Indian Statistics Service

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | General English | I | Objective | 3 | 150 |
| 2. | General Studies | I | " | 3 | 150 |
| 3. | Statistics I | I | " | 3 | 200 |
| 4. | Statistics II | I | " | 3 | 200 |
| 5. | Statistics III | I | Essay type | 3 | 200 |

II. Viva for successful candidates.

### Indian Forest Services:

தாவரவியல், வேதியியல், நிலவியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல், புள்ளியியல், வேளாண்மையியல், பொறியியல், வனவியல், இளநிலைப் பட்டதாரிகள் இத்தேர்வினை எழுதலாம். இப்பணிக்கான அறிவிப்பு ஜனவரி / பிப்ரவரியில் அறிவிக்கப் படும். ஆகஸ்ட் மாதத்தில் எழுத்துத் தேர்வு நடைபெறும். பொது அறிவு, பொது ஆங்கிலம் கட்டாயமான தாள்கள்.

துறை சார்ந்த பாடங்களில் ஏதேனும் இரண்டினைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும். நேர் முகத் தேர்வும் உண்டு. குறிப்பாக வேளாண்மை, வேளாண் அறிவியல், இணைந்த விருப்பப் பாடங்களும், வேதியியலும், பொருளியலும் இணைந்த விருப்பப் பாடங்களும் தவிர்க்கப் பட வேண்டும்.



### Indian Engineering Services

இத்தேர்விற்கான அறிவிப்பு மார்ச் மாதத்தில் வெளியிடப்படும். ஆகஸ்டு மாதத்தில் தேர்வு எழுத வேண்டும்.
ஆகஸ்ட் முதல் நாளில் 20 வயது நிரம்பியவராகவும், 28 வயதுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும். வயது வரம்பு (விதி விலக்கினை மையத் தேர்வாணையம் அறிக்கையின் மூலம் அறிந்து கொள்ள வேண்டும். பொருளியல் இளநிலை பட்டதாரிகளும் M.Sc., Wireless Communication, Electronics, Radio Physics or Radio Engineering பாடம் படித்தவர்களும் இத் தேர்வு எழுதத் தகுதி பெற்றவர்கள்.

**தேர்வு முறைகள்:**

| S.No. | Subject | Time | Marks |
|---|---|---|---|
| 1. | General Ability Test (Part A English + Part B General Studies) | 2 | 200 |
| 2. | Relevant Engineering Subject Paper I | 2 | 200 |
| 3. | Relevant Engineering Subject Paper II | 2 | 200 |
| | Section II – Conventional Papers: | | |
| 4. | Relevant Engineering Subject | 3 | 200 |
| 5. | Relevant Engineering Subject | 3 | 200 |

நேர்முகத் தேர்வும் உண்டு. General Ability Test Part A English Grammar and Usage சிறப்பிடம் பெறுகின்றன. Part B. General Studies. நாட்டு நடப்புகள், பொது அறிவியல், இந்திய வரலாறு, பூகோளம் பகுதியிலிருந்து வினாக்கள் தொடுக்கப்படுகின்றன.

### Geologist Examination

நிலவியலில் பயனுறு நிலவியல், 'மரைன்' நிலவியல் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள், Associateship in Applied Geology of School of Mines, Dhanbad, M.Sc., in Mineral Exploitation, Karnataka University போன்ற தகுதியினைப் பெற்றோர் இத்தேர்வு எழுதத் தகுதியிடையோர். ஜனவரி

முதலாம் ஆண்டு நாள் 21-வயது நிரம்பிய வராகவும், 30 வயதுக்குட்பட்டும் உள்ளோர் இத்தேர்வினை எழுதலாம். அக்டோபர் மாதத்தில் இத்தேர்வு பற்றிய விவரம் வெளி யிடப்படும். ஏப்ரலில் தேர்வு நடைபெறும்.

எழுத்துத் தேர்வில் objective type multiple choice answer, General English, Geology Paper I, II, III, Hydrogeology முதலியன இடம் பெறும். பின்னர் நேர்முகத் தேர்வு நடைபெறும்.

**Combined Medical Services:**

M.B.B.S., படித்தவர்கள் இத்தேர்வினை எழுதலாம். ஜனவரி முதல் நாள் 30 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். அக்டோபர்மாதம் இத்தேர்வு பற்றிய விளம்பரம் வெளியிடப்படுகிறது. மார்ச் மாதத்தில் ஒரே நாளில் இத்தேர்வு நடைபெறும்.

எழுத்துத் தேர்வில், General Medicine including Paediatrics, Surgery including ENT, Opthalmology, Dermatalogy and Orthopaedics, Preventive Medicine and Community Health including Family Welfare, Maternal and Child Health and other National Programmes, Objectries and Gynecology, பின்னர் நேர்முகத் தேர்வு நடைபெறும். தவிர, Combined Defence Services, NDA, Assistant Engineer (PWD) Limited Departmental Competitive Exams, Assistant Grade Exams, Special Class Railway Apprentices Examination போன்றவற்றை மையத் தேர் வாணையம் நடத்துகிறது.

**Combined Defence Service Examination**

இத்தேர்வு ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் நடத்தப்படுகிறது. இத்தேர்வில் வெற்றிபெறுவதன்மூலம், வெற்றிபெற்றவர்கள் கீழ்க்காணும் இடங்களில் ஏதேனும் ஒன்றிற்குப் பயிற்சிக்காக அனுப்பபடுவார்கள்.

(1) இந்திய இராணுவப் பயிற்சி முகாம், டேராடூன்.
(Indian Military Academy, Dehradun)

(2) கப்பற் படை முகாம், கோவா
(Naval Academy, Goa)

(3) விமானப்படை நிலையம், பேகம்பேட், ஹைதராபாத்
(Air Force Station, Begampet, Hyderabad)

(4) அலுவலர் பயிற்சி முகாம், சென்னை
(Officers' Training Academy, Madras)




இத்தேர்வுக்கான பாடத்திட்டம் கீழ்க் கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது. எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும் உண்டு.

எழுத்துத் தேர்வில், ஆங்கிலம், பொது அறிவு, ஆரம்பநிலை கணிதம், ஆகியவை உள்ளன.

நேர்முகத் தேர்வில் அறிவைச் சோதிக்கும் சில தேர்வுகளும், நேர்முகத் தேர்வும் நடைபெறும்.

***(2) வங்கிப் பணிகள்:-***

நம் நாட்டில் வங்கிப் பணிகளுக்கான தேர்வுகளும் முக்கிய இடம் வகிக்கின்றது. குறிப்பாகத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் சில ஒன்றாக இணைந்தோ, அல்லது தனித்தோ போட்டித் தேர்வுகளை நடத்தி, தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான நபர்களை பணிக்கு அமர்த்திக் கொள்கின்றனர். பாரதவங்கி (State Bank of India) Central Recruitment Board என்ற குழுவின் மூலம் தங்கள் நிறுவனத்தில்

உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதன் மூலம் தேடிக்கொள்.

– தந்தை பெரியார்

ஏற்படும் காலியிடங்களுக்கு ஏற்பப் போட்டித் தேர்வுகளை நிர்ணயித்து அதில் வெற்றி பெறுபவர்களில் சிறந்தவர்களை நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுத்துப் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். மற்றும் பல வங்கிகள் தங்களுக்குத் தேவையான நபர்களைப் போட்டித் தேர்வின் மூலமே தேர்வு செய்கின்றன. மாநில வாரியாக BSRB எனப்படும் "Banking Service Recruitment Board" என்ற குழு போட்டித் தேர்வுகளை நடத்தி, தகுதியானவர்களை வங்கிகளில் பணி நியமனம் செய்கின்றது.

இத்தேர்வுகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பகுதி Probationary Officer எனப்படும் வங்கி அலுவலர்களுக்கானது. இரண்டாவது பகுதி குமாஸ்தாவாகப் பணி புரிபவர்களுக்கானது (Clerical Jobs).

இவற்றில் Probationary Officer பதவிக்குத் தகுதி இளநிலைப் பட்டங்களில் ஏதேனும் ஒன்று என வரையறுக்கப்பட்டுள்ளது. இத் தேர்வுக்குப் போட்டியிடுபவரின் வயது 21 முதல் 28 வரை இருத்தல் வேண்டும்.

இத்தேர்வில் ஆங்கிலம், பொது அறிவு, கணித நுண்ணறிவு, தன்னறிவு (Mentability Reasoning) போன்ற பகுதிகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும். இக்கேள்விகள் புறவய (Objective type) வினாக்களாகவே இருக்கும். இத்துடன் ஆங்கில அறிவை சோதிக்கும் ஆங்கிலக் கட்டுரை, சுருக்கி வரைதல் போன்ற கேள்விகளும் கேட்கப்படும்.

வங்கிக் குமாஸ்தாப் பணிகளுக்கான (Bank Clerical Jobs) தேர்வில் பள்ளி இறுதி மாணவர்கள் முதல் முதுநிலைப் பட்டதாரி மாணவர்கள் வரை இத்தேர்வில் பங்கு கொள்கின்றனர். பங்கு கொள்பவர்களின் குறைந்த பட்ச வயது 18 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

> எங்களுக்குத் தேசம்தான் தெய்வம்; தேசத்தின் மக்கள்தான் எங்கள் சொத்து, சுகம் எல்லாம். அதற்கு ஆபத்து வரும்போது எங்கள் உயிர்களை உருவிக் கொடுத்தாவது தேசத்தைக் காத்துநிற்போம்.
>
> – முத்துராமலிங்கத்தேவர்

> படித்தவன் உழவேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க உழுபவன் உற்பத்தியைப் பெருக்க இருசாராரும் இணைந்தால்தானே ஏற்றம் காண முடியும்.
>
> – அறிஞர் அண்ணா

இத்தேர்விலும் ஆங்கிலம், கணித நுண்ணறிவு, பொது அறிவு, பிழை கண்டறிதல், தன்னறிவுச் சோதனை (Reasoning) இவைகள் புறவய வினாக்களாகக் கேட்கப்படும். இத்துடன் அந்தந்த மாநில மொழிகளிலேயே கட்டுரை வரைதல் போன்ற கேள்விகளும் இருக்கும்.

வங்கிப் பணிக்கான தேர்வுகள், குறிப்பிட்ட சில வருட இடைவெளியிலோ, அல்லது மாத இடைவெளியிலோ நடத்தப்படுவது இல்லை. எவ்வப்பொழுது, காலியிடங்கள் ஏற்படுகின்றனவோ, அக்காலியிடங்களைப் பொறுத்துத் தேர்வுகள் அக்குறிப்பிட்ட வங்கிக்கான தேர்வுக் குழுவின் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

**(3) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India)**

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் பணி காலியிடங்களுக்கு ஏற்ப மண்டல வாரியாகத் தேர்வு அறிவிப்பு செய்கிறது.

இந்நிறுவனமும் குமாஸ்தாப் பணிகளுக்கான (Clerical) தேர்வுகளையும், துணை நிர்வாக அலுவலர் பதவிக்கான (Assistant Administrative Officer) தேர்வுகளையும் தனித்தனியே நடத்தி, தகுதியானவர்களைப் பணி நியமனம் செய்கிறது.

மேற்கூறப்பட்ட வங்கிப் பணிகளுக்கான வயது வரம்பு கல்வித் தகுதிகள் இத்தேர்வுகளுக்கும் பொருந்தும். பெருகி வரும் மக்கள் தொகைப் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற காரணங்களினால் இத்தேர்வுகளில் பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தொடர்ச்சி அடுத்த இதழில்....

# வாசகர் இதயம்

'தமிழரசு' இதழ் மிகவும் மாறுபட்டுப் பொலிவுடன் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி; மற்ற நூல்களிலிருந்து சிறந்த படைப்புகளை எடுத்து வெளியிடுவது ஒரு நல்ல ஏற்பாடு. காலாடிப்பேட்டைக்கு ஏன் அப்பெயர் வந்தது என்கிற ரா.பி. சேதுப்பிள்ளை கருத்துக்கு நான் முரண்படுகிறேன். கால்களை ஆட்டி நெசவு செய்வோர்மிகுந்துள்ளபேட்டை என்பதனாலும் அந்தப் பெயர் வந்திருக்கலாம் அல்லவா?

**– செந்தமிழ்க்கிழார்**
சென்னை - 600 032

தமிழரசு ஏட்டின் அமைப்பு, உள்ளடக்கம் எல்லாமே அற்புதம். வளரட்டும் இப்பணி.

**– பி. மகேஸ்வரி**
பாளையங்கோட்டை

அப்துல் ரகுமானின் 'ஹைகூ' பற்றிய கட்டுரை, ஆசிரியர் மடல் எல்லாமே என் மனசைப் பறித்தது. ஆசிரியர் பொறுப்பு வகிக்கும் அற்புத சாட்சிக்கு அன்புப் பூச்செண்டு.

**– வெற்றிப் பேரொளி**
திருக்குவளை

சட்டமற்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய நிதிநிலை அறிக்கையும், அதன் மீதான பதிலும் தனியே பாதுகாக்கப்பட வேண்டிய அளவில் இருந்தது; அதைத் தனி இணைப்பாக வெளியிட்ட 'தமிழரசு'க்கு எங்கள் பாராட்டு.

**– ச.சிவகோபால்**
ஆர்.என். பாளையம்

'தமிழரசு' 1.7.96 இதழில் வந்த அறிஞர் அண்ணா பற்றிய பெட்டிச் செய்தி ஒன்றில் கடைசியாக அவர் கலந்துகொண்ட கலைவாணர் சிலைதிறப்பு நிகழ்ச்சி 14.11.69 என்றிருப்பது தவறு; அத் தேதி 14.1.69 என்று இருந்திருக்க வேண்டும்.

**– தலைமை ஆசிரியர்**
வடகடம்பாடி

தமிழரசு துவங்கப் பெற்ற நாளிலிருந்து எங்களுக்கு இதழ் கிடைத்து வருகிறது. முன் எப்பொழுதும் இல்லாத வகையில் இப்பொழுது தமிழரசு இதழ் செழிப்பாகவும், அரசின் சாதனைகளை சுவைபட விளக்குவதோடு அறிவு பூர்வமான செய்திகளையும் தாங்கி வெளிவருகின்றன. மகிழ்ச்சி வாழ்த்துக்கள்.

**– T.V.G. பிரபாகர்**
திருச்சிராப்பள்ளி - 620 002.

திருமதி ஆஷா பூர்ணாதேவி அவர்கள் எழுதிய ''காலாட்படை'' என்னும் தொடரில் சேரிக்குழந்தைகள் என்னும் வாசகம் எழுதி உள்ளார். அந்த வாசகத்தைப் படிக்கும் போது சிறிது வேதனையாக இருந்தது. எங்கள் குழந்தைகள்தான் இப்படி இருக்கிறதா? இதுபோல எழுதப்படும் வாசகங்களை இனியாவது தவிர்க்கவும்.

**– N. ஆறுமுகம்,**
தர்மபுரி - 636 701.

'தமிழரசின்' 16.6.96ந் தேதி இதழ் கண்டேன். பல குறுகிய கருத்து வளம் மிக்க செய்திகள், உடல் ஆரோக்கியத்துக்கென தனி தகவல்கள் கொடுத்துள்ளீர்கள். கண்ணுற்று மகிழ்ந்தேன்.

**– எஸ். வேலுச்சாமி,** பி.காம்.
சிவகாசி மேற்கு - 626 124.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927



# ஆசிரியர் மடல்

சிந்தனை செய் மனமே!

'கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்து
ஆய்ந்த பசுந்தமிழ்....'

தொண்டர் நாதனைத்
தூதிடை விடுத்ததும்,
முதலை உண்ட பாலனை விடுத்ததும்,
எலும்பு பெண்ணுருவாக் கண்டதும்
தண்டமிழ்ச் சொலே...'

— என்றெல்லாம் நாம்
பழையதைச் சொல்லிப்
புதிய பூரிப்பில் ஆழ்கிறோம்!

கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தே முன்தோன்றி
மூத்தகுடி எனக்
குடிப்பெருமை பேசிக்
குதூகலிக்கிறோம்!

எல்லாம் சரிதான்! ஆனால்...
இந்திய அரசால் போடப்பட்டுள்ள
செம்மொழிகள் பட்டியலில்
இலக்கணத் தெளிவும்
இலக்கிய வளமும் பெற்றுள்ள
நம் தமிழ்மொழி இடம்பெறவில்லை!

டில்லியில் நடைபெற்றதோர் விழாவில்,
வடமொழி, அராபி, பாரசீகம் ஆகிய
மும்மொழி அறிஞர்களுக்குக்
குடியரசுத் தலைவர் அவர்கள்
விருது வழங்கியிருக்கிறார்.
அம்மொழிகளெல்லாம் செம்மொழிகளாம்!
ஆனால் நம் மொழி?

செப்புமொழி பதினெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்
என்று பாரதி போற்றிய பாரதத்தாய்
நம் தமிழ்த்தாயை ஓரங்கட்டுவதேன்?

'தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்' என்ற
புரட்சிக்கவிஞரின் கனவை
நனவாக்கியாயிற்று!

தமிழ் வளர்ச்சிக்கெனத்
தனியொரு துறையும் கண்டாயிற்று!

இந்நிலையில்
நம் தாயாம் தமிழ்மொழி
செம்மொழி இல்லையென்றால்?
தமிழறிஞர்கள் சிந்திப்பார்களாக!








தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


மிழக அரசு திரைப்பட விருதுகள்
வழங்கும் விழா
18.08.1996.

